# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - VOL. 19 ISSUE 10 - 36 PAGES - Rs. 21/-

ஜனவரி 2022




*கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை...*
அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும்
பொருந்திய தேவன்தாமே
கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற
**உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி,
பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக.**
(1 பேதுரு 5:10)

JESUS CALLS
PRAYING FOR THE WORLD

# புத்தாண்டு வெளியீடுகள்




## 2022-ம் ஆண்டிற்கான மாதாந்திர காலண்டர்

365 நாட்களுக்கும் சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன் ஜெபத்துடன் தெரிந்தெடுத்த அனுதின வாக்குத்தத்த வசனங்கள்


**1 காலண்டர்**
நன்கொடை ரூ.30/-
(தபால் செலவு ரூ.20/- தனி)

**10 காலண்டர்கள்**
நன்கொடை ரூ.270/-
(தபால் செலவு ரூ.90/- தனி)

**50 காலண்டர்கள்**
நன்கொடை ரூ.1,350/-
(தபால் செலவு ரூ.350/- தனி)

**100 காலண்டர்கள்**
நன்கொடை ரூ.2,700/-
(தபால் செலவு ரூ.650/- தனி)

**தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாள மொழிகளில் கிடைக்கும்**




## 2022 டைரி

டைரியின் ஒவ்வொரு பக்கத்திலும், காலண்டரில் உள்ள அனுதின வேதாகம வாக்குத்தத்த வசனங்கள் உண்டு

**டைரி** (மீடியம்)
**நன்கொடை ரூ.150/-**
**(தபால் செலவு ரூ.40/- தனி)**

## 2022 பாக்கெட் காலண்டர்




25 பாக்கெட் காலண்டர்கள் அடங்கிய தொகுப்பு

**நன்கொடை ரூ.20/-**
**(தபால் செலவு ரூ.25/- தனி)**

## மற்றவர்களுக்கு வெகுமதியாக வழங்கி ஆசீர்வாதம் பெறலாம்!
## 2022-ம் ஆண்டிற்கான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாகுங்கள்!

மேலும் விவரங்களுக்கு: உங்கள் பகுதியிலுள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை அணுகலாம்.
இணையதளம்: *www.jesuscalls.org* பங்காளர் சேவை எண்: **044 - 23456677** (காலை 7 முதல் இரவு 9 மணி வரை - இந்திய நேரம்)

மணியார்டர் மற்றும் காசோலை மூலம் வாங்குவதற்கு:
**True Friend Management Support Service Pvt. Ltd.,** என்ற பெயரில் எடுக்கப்பட்ட மணியார்டர் மற்றும் டிமாண்ட் டிராப்ட்டுகளை விகாஸ் மந்திர டவர், மூன்றாவது தளம், பழைய எண் 120, புதிய எண் 249, ஆர்.கே. மட் ரோடு, மந்தைவெளி, சென்னை 600 028 என்ற முகவரிக்கு அனுப்பவும்.
மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ள: *info@truefriend.co.in*
இணையதளம் மூலம் வாங்குவதற்கு: *www.truefriendshoppe.app*



# மகத்துவத்திற்குள் பிரவேசித்தல்

“நீர் ஒரு காரியத்தை நிருணயம்பண்ணினால், அது உமக்கு நிலைவரப்படும்; உம்முடைய பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.” (யோபு 22:28)

***என்பதே இந்த ஆண்டின் முதல் மாதத்திற்கான வாக்குத்தத்த வசனமாகும். இவ்வசனம் மெய்யாகவே இந்த ஆண்டு முழுமைக்கும் ஏற்றதாக இருக்கும்.***



ஆம், அன்பு சகோதரரே / சகோதரியே, நீங்கள் செய்ய தீர்மானிக்கும் காரியங்கள் நடக்கும்; உங்கள் பாதைகளில் வெளிச்சம் பிரகாசிக்கும். நீங்கள் தீர்மானிப்பது எப்போது நடக்கும்? உங்கள் பாதைகளில் எப்போது வெளிச்சம் பிரகாசிக்கும்? என்ற கேள்விகளுக்கான விடையை இதற்கு முந்தைய வசனம், “நீர் அவரை நோக்கி விண்ணப்பம்பண்ண, அவர் உமக்குச் செவிகொடுப்பார்; அப்பொழுது நீர் உம்முடைய பொருத்தனைகளைச் செலுத்துவீர்” (யோபு 22:27) என்று கூறுகிறது.

ஆம், நீங்கள் ஒவ்வொரு முடிவையும் ஜெபத்துடன் எடுக்கும்போது, உங்கள் வழிகளில் தேவ தயவு விளங்கும்; வெளிச்சம் பிரகாசிக்கும்.

**“நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்.”** (சங்கீதம் 37:23)

– *Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org*



# தேவன் உங்கள் பாதைகளை செவ்வையாக்குவார்

முடிவுகளை நீங்கள் சுயமாகவே எடுக்கிறீர்கள். குறிப்பாக, உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையைக் குறித்த முடிவுகளை, தேவனிடம் ஜெபிக்காமல் எடுப்பதால், அவைகள் உங்களுக்கு பாதகமாகிப் போகின்றன. தாவீது தன் திருமணத்தைக் குறித்த முடிவை தேவனிடம் ஜெபிக்காமல் எடுத்தான்.

> **"ராஜாவுக்கு மருமகனாகிறது தாவீதுக்குப் பிரியமா யிருந்தது."** (1 சாமுவேல் 18:26)

வனாந்தரத்தில் ஆடு மேய்க்கும் வாலிபனாக, யாராலும் கவனிக்கப்படாமல், மதிக்கப்படாமல் இருப்பதைவிட ராஜாவுக்கு மருமகனானால் தனக்கு கனம், ஆஸ்தி, அதிகாரம் கிடைக்குமாதலால், அதுவே சிறந்தது என்று தாவீது தீர்மானித்தான். தான் எளிதாக ராஜாவாகிவிடலாம் என்று அவன் நினைத்தான். அந்தோ! அவன் எண்ணியதைப் போன்று தேவன் தீர்மானிக்க வில்லை. ராஜாவின் குமாரத்தியை தாவீது திருமணம் செய்தான்; ஆனால், அவளுக்கு குழந்தை பாக்கிய மில்லை. தாவீது தன் வாழ்க்கையில் எல்லாவற்றைக் காட்டிலும் தேவனை அதிகமாய் நேசிப்பதை அவள் கண்டபோது, அவனைப் புறக்கணித்தாள். தாவீது தன்னைக்காட்டிலும் ஜனங்களிடம் அதிகமாய் பேர்பெற்றி ருப்பதையும், அவர்கள் அவனை அதிகமாய் நேசிப்ப தையும் கண்டபோது, ராஜா அவனை கனப்படுத்து வதற்குப் பதிலாக அவன்மீது பொறாமை கொண்டான். ராஜா அவனை கொல்லுவதற்கு முயற்சித்தான். ஆகவே, தாவீதால் அரமனையில் தங்க முடியவில்லை. மரண பயத்தோடு, வனாந்தரங்களில் ஒளிந்து திரிய வேண்டிய தாயிற்று.

தாவீது, தன்னுடைய வாழ்க்கைக்கான திட்டத்தை அறிந்துகொள்ளும்படி தேவ சமுகத்தில் ஜெபத்தில் காத்திருக்காததினால் இது நடந்தது. இந்த போராட்டங்கள், வேதனை, துக்கம் மற்றும் வனாந்தரத்தில் அலைந்து திரிந்த பிறகு தாவீது மனந்திரும்பி, தேவனுடைய முடிவுக்கு தன்னை ஒப்புக்கொடுத்தான். அதன்பின்பு இஸ்ரவேலின் மேல் ராஜாவாக்கும் தேவனுடைய மகத்தான திட்டத்திற்குள் அவன் வழிநடத்தப்பட்டான்.

தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதை செய்ய தீர்மானித்து ஆசீர்வதிக்கப்பட்ட சிலரைக் குறித்து நாம் தியானிக்கலாம்.

நீங்கள் தேவனுடைய வழி காட்டுதலை நாடும்போது, அவர் உங்களுக்கு பாதையைக் காட்டுவார்; மட்டுமல்ல, நீங்கள் உறுதியாய் நிலைவரப் படுவீர்கள்.

## வழியைக் கண்டுபிடிக்கும் ஜெபம்

இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து வாக்குத் தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்திற்கு வழிநடத்திய தீர்க்கதரிசியாகிய மோசேயின் வாழ்க்கையின் மூலம் வேதம் நமக்கு இதை விவரிக்கிறது.

> **"உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்ததானால் நான் உம்மை அறிவதற்கும், உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைப்பதற்கும், உம்முடைய வழியை எனக்கு அறிவியும்; இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும் என்றான். அதற்கு அவர்: என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்."** (யாத்திராகமம் 33:13,14)

எவ்வளவு சிறந்த தேவன்! கர்த்தராகிய தேவன் உங்களுக்கு முன்பாகச் செல்லும்போது அதிசயமான பல அற்புதங்கள் நடக்கும்.

> **"நான் உனக்கு முன்னே போய், கோணலான வைகளைச் செவ்வையாக்குவேன். அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்."** (ஏசாயா 45:2,4)

உங்கள் பாதைகள் செவ்வையாவதுடன், ஒளிப்பிடங் களில் இருக்கிற புதையல்களும் உங்களுக்கு வந்து சேரும்!

## ராஜாவும் ராஜாவின் மருமகனும்

பல நேரங்களில் வாழ்க்கையின் முக்கியமான

## யோசபாத்தின் எக்காளம்

> **"சிலர் வந்து, யோசபாத்தை நோக்கி: உமக்கு விரோ தமாய் ஏராளமான ஜனங்கள் கடலுக்கு அக்கரையி**

**லிருக்கிற சீரியாவிலிருந்து வருகிறார்கள்; இதோ, அவர்கள் எங்கேதியாகிய ஆசாசோன்தாமாரில் இருக்கிறார்கள் என்று அறிவித்தார்கள். அப்பொழுது யோசபாத் பயந்து, கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான்.''** (2 நாளாகமம் 20:2,3)

சவக்கடலின் மறுபுறமிருந்து ஒரு சேனை யோசபாத் ராஜாவை தாக்குவதாகவும், அவர்கள் ஏற்கனவே எங்கேதியைப் பிடித்துவிட்டார்கள் என்றும் அவனுக்குக் கூறப்பட்டது. யோசபாத் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தபோது, முதலாவதாக கர்த்தருடைய ஆலோசனையைக் கேட்க தீர்மானித்தான். அவன் தன்னுடைய ஆலோசகர்கள் மற்றும் சேனாபதிகள் உள்ளிட்டோரின் அறிவுரையை நாடவில்லை. கர்த்தருடைய கட்டளையைப் பெற்றபின்னர், யோசபாத், யுத்தத்தில் முன்னாக செல்லும்படி பாடகரை அனுப்பினான். இராணுவம் அவர்களைப் பின்தொடர்ந்தது. அவர்கள் களிகூர்ந்து உரத்தக் குரலில், ''கர்த்தர் நல்லவர். அவர் கிருபை என்றுமுள்ளது'' என்று பாடினார்கள். அந்த ஆராதனையின் மூலம் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்கு முன்னாகச் சென்று எதிரிகளை முற்றிலுமாய் அழித்தார். ஆம், விரோதிகள் தங்களுக்குள்ளாகவே யுத்தம் செய்து ஓடிப் போனார்கள். யோசபாத், எதிரிகளின் பாளயத்திற்குச் சென்று கொள்ளையிட்டான்; கொள்ளை கொண்ட பொருட்களால் அவன் மிகுந்த செல்வத்தை சேகரித்தான்.

## யோசேப்பின் உத்தமம்

தனக்கு நியமிக்கப்பட்ட மரியாள் கர்ப்பவதியாக இருக்கிறாள் என்று யோசேப்புக்கு தெரியவந்தது.

**''அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையிருந்தான்.''**

(மத்தேயு 1:19)

என்று வேதம் கூறுகிறது. யோசேப்பு நீதிமானாக இருந்தபடியினால், அவன் பெரிய தவற்றை செய்துவிடாமல் தூதனை அனுப்பி தேவன் தடுத்தார். மனுஷரால் புரிந்துகொள்ள முடியாத தேவனுடைய திட்டத்திற்கு அவன் கேள்விகேட்காமல் தன்னை முற்றிலுமாய் அர்ப்பணித்து, மரியாளை தன்னுடைய மனைவியாக ஏற்றுக்கொண்டான். மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனாகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வருவதற்கு அவன் மரியாளுக்கு உதவி செய்து ஆதரவளித்தான். யோசேப்புக்கு எவ்வளவு பெரிதான கனம் கிடைத்தது! நீதிமான் என்ற பெயர் அவனுக்கு நிலைத்து நிற்கிறது.

## பூரண மாதிரியானவர்

ஆண்டவராகிய இயேசு தம்முடைய சீஷர்களை எவ்வாறு தெரிந்தெடுத்தார் என்று மாற்கு 3-ம் அதிகாரம் கூறுகிறது. இயேசு தாமாக முடிவெடுத்தோ, அவர்களது தாலந்துகளின்படியோ அல்லது சிறந்த தகுதிகளின்படியோ சீஷர்களை தெரிந்தெடுக்கவில்லை. அவர் மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனாக இருந்தபோதிலும், தெய்வீக ஞானத்தையும், வழிகாட்டுதலையும் நாடி பரலோகத்தின் தேவனை நோக்கிப்பார்த்தார். நாம் தேவனுக்குச் செவி கொடுத்து, ஞானமாய் நடந்து முக்கியமான முடிவுகளை எடுக்கவேண்டுமென்பதை அவர் நமக்குக் காட்டினார்.

**''பின்பு அவர் ஒரு மலையின்மேல் ஏறி, தமக்குச் சித்தமானவர்களைத் தம்மிடத்தில் வரவழைத்தார்; அவர்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்.''**

(மாற்கு 3:13)

இயேசு கூட்டத்தினரிடமிருந்து விலகி, மலையின் மேல் எறினார். இறுதியாக, பன்னிரண்டு பேரைத் தெரிந்தெடுப்பதற்குமுன்பு அவர் இரவு முழுவதும் ஜெபித்தார். யூதாஸ் தன்னை ஒருநாள் காட்டிக் கொடுப்பான் என்று அவர் அறிந்திருந்தார். ஆனாலும், அவனையும் அவர் தெரிந்தெடுத்தார்.




அந்த முடிவு, இயேசுவை பொறுத்தமட்டில் மிகவும் கடினமான



# தேவனுடைய திட்டங்கள் கற்பனைக்கும் அப்பாற்பட்டவை

ஒன்று. ஆனால், முழு மனுக்குலத் திற்கும் இரட்சிப்பை அளிப்பதற்காக, காட்டிக் கொடுக்கப் பட்டு, சிலுவையில் அறையப்படவே இயேசு இந்த உலகிற்கு இறங்கி வந்தார்.

## மவுனத்தின் பாதை

**“என் நாவினால் பாவஞ் செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத் தால் அடக்கிவைப்பேன் என்றேன்.”** (சங்கீதம் 39:1)

இங்கே சங்கீதக்காரனாகிய தாவீது, ஞானமான ஒரு முடிவை எடுக்கிறான். தன் வாயிலிருந்து வரும் வார்த்தை களின்மேல் கவனமாயிருக்க அவன் தீர்மானித்திருந் தான். தன் நாவினாலும், சிந்தனையினாலும் அல்லது தீர்மானங்களினாலும் தேவனுக்கு விரோதமாக பாவஞ் செய்யக்கூடாதென்று நிச்சயித்திருந்தான். பொல்லாத மனுஷர்கள் மத்தியில் தன் வாய்க்கு கடிவாளம் போடு வதாக அவன் கூறுகிறான். நீங்கள் பாவத்தைக் குறித்த வார்த்தைகளை உச்சரிக்காமலும், தேவனுடைய நியாயத்தீர்ப்பு பொல்லாத மனுஷர்கள்மேல் வரும்படி அவர்களுக்கு எதிராக பேசாமலும் இருக்கவேண்டும். உங்கள் இருதயத்தில் மவுனம் நிலவி, நீங்கள் உங்கள் சமாதானத்தைக் காத்துக்கொள்ளும்போது, பொல்லாத மனுஷருக்கு விரோதமாக கர்த்தருடைய தீர்ப்பு வரும். எந்தப் பாவத்தைக் கொண்டும் உங்களை ஒருவராலும் குற்றப்படுத்தக் கூடாமற்போகும்.

பிரதான ஆசாரியர்கள், பரிசேயர்கள், சதுசேயர்கள் மற்றும் சமயத் தலைவர்கள் அனைவருடைய கூட்டத்தி னரும் இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறையும்படி பொந்தியுபிலாத்துவை நோக்கிக் கூக்குரலிட்டபோது, பிலாத்து அதைக் குறித்து இயேசுவிடம் கேட்டான் என்றும், இயேசு அவனுக்கு பதிலளிக்கவில்லை என்றும் வேதம் கூறுகிறது.

**“அவரோ ஒரு வார்த்தையும் மாறுத்தரமாகச் சொல்லவில்லை; அதனால் தேசாதிபதி மிகவும் ஆச்சரியப்பட்டான்.”** (மத்தேயு 27:14)

ஆம் சகோதரரே / சகோதரியே, பொறுமையானது உங்கள் ஆத்துமாவை மாசற்றதாக, கறைபடாததாக காத்துக்கொள்ளும்.

**“உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக் களைக் காத்துக்கொள்ளுங்கள்.”** (லூக்கா 21:19)

அன்பு சகோதரே / சகோதரியே, தேவன் உங்களுக் காக பேசி, உங்களுக்கு நியாயத்தை அருளி, உங்களுக்கு தீங்கு செய்தவர்களுக்கு விரோதமாக நியாயத்தீர்ப்பை கொண்டு வரட்டும். நீங்கள் மவுனமாயிருங்கள். உங்கள் வாயிலிருந்து பாவம் நிறைந்த வார்த்தைகள் வர வேண்டாம். உங்களை தற்காத்துக்கொள்ளும்விதமாக உங்கள் நாவு பேசாதிருக்கட்டும். தேவன் நீதியுள்ள நியாயாதிபதி; அவரே உங்களுக்காக வழக்காடுவார் (2 தீமோத்தேயு 4:8). தேவன் பொல்லாத மனுஷரில் மாற்றம் உண்டாகச் செய்து, தாம் உங்கள்மேல் தயவாய் இருப்பதை அவர்களுக்கு வெளிப்படுத்துவார். நீங்கள் மனுஷருக்கு முன்பாக மவுனமாயிருந்து, உங்கள் இருதயத்தையும் வாயையும் கர்த்தராகிய தேவனிடம் மட்டும் திறக்கும்போது, அவர் தம்முடைய தெய்வீக ஆசீர்வாதங்களை அபரிமிதமாய் உங்கள்மேல் பொழிந் தருளி, உங்கள் நீதியை எல்லா மனுஷர் முன்பாகவும் நிலைவரப்படுத்துவார்.

## தீர்க்கமான பாதை

பழுதற்ற தீர்மானங்களை எடுப்பதற்கான இன்னொரு வழியை வேதம் நமக்கு காட்டுகிறது.

**“நான், ஞானமானது என்ன என்றும், பைத்தியமும் மதியீனமும் என்ன என்றும் பார்த்து அறியும்படி திரும்பினேன்...”** (பிரசங்கி 2:12)

ஞானத்தையும், ஜனங்களுடைய பைத்தியமான நடக்கைகளையும், மதியீனத்தையும் அறிந்துகொள்ள வேண்டும். ஆம், ஜனங்கள் மதியீனமான காரியங்களை செய்கிறார்கள்; அவர்களே ஞானமுள்ள காரியங்க ளையும் செய்கிறார்கள். ஆம், ஜனங்கள் ஞானத்தினால் எப்படி செழிக்கிறார்கள் அல்லது மதியீனமான நடக்கைக ளால் எப்படி விழுந்துபோகிறார்கள் என்பதை நீங்கள்

24 மணி நேர ஜெப உதவிக்கு
044 - 45 999 000 [எட்டு மொழிகளில்]

# தேவன் உங்களுக்காக வழக்காடுவார்



பார்த்தால், உங்களை சரிசெய்துகொண்டு, உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டங்களுக்கு உங்களை அர்ப்பணிக்க முடியும்.

**“இருக்கிறவன் எவனும் தோன்றுமுன்னமே பேரிடப்பட்டிருக்கிறான்; அவன் மனுஷனென்று தெரிந்திருக்கிறது; தன்னிலும் பலத்தவரோடே போராட அவனால் கூடாது.”** (பிரசங்கி 6:10)

எல்லாமுமே முன்பாகவே திட்டமிடப்பட்டுள்ளன; அறியப்பட்டுள்ளன என்று இந்த வசனத்தில் எழுதப் பட்டுள்ளது. ஆகவே தேவன் ஒன்றை செய்துவிட்டார் என்று அவரோடு முரண்படுவதில் அல்லது அவரை மிஞ்சி ஒன்றை செய்ய முயற்சி செய்வதில் அர்த்த மில்லை. தேவன், என்னைக்காட்டிலும் உங்களைக்காட் டிலும் வல்லவராயிருக்கிறார். ஆகவே, நீங்கள் மதி யீனமான வழிகளையும், ஞானமுள்ள வழிகளையும் யோசிக்கவேண்டும். ஞானத்தின் வழிகள், ஆசீர்வாதத் துடன் இயேசுவின் வாழ்க்கையைப்போல் மறுதலிப்பு களையும் கொண்டதாகும். முடிவில் நீங்கள் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவராக எழும்புவீர்கள்.

### சிறப்பான மேன்மை

அன்பு சகோதரரே / சகோதரியே, தேவன் உங்களுக் கென்று பிரத்தியேக திட்டம் ஒன்றை வைத்திருக்கிறார். நீங்கள் உங்களுக்காக வைத்திருக்கும் திட்டங்களுடன் அதை ஒப்பிடவோ அல்லது கற்பனை செய்துபார்க்கவோ கூடாது.

**“என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவு களும் உயர்ந்திருக்கிறது.”** (ஏசாயா 55:8,9)

என்று கர்த்தர் கூறுகிறார். ஆகவே, நீங்கள் ஒருபோதும் திகைத்து நடுங்கவோ, தடுமாறவோ அவசியமில்லை.

**“நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.”** (சங்கீதம் 32:8)

என்று கர்த்தர் கூறுகிறார். தேவனுடைய வழிகாட்டுலை நாடி பரிசுத்த ஆவியானவர் மூலமாக ஜெபித்தால், உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய தீர்மானத்திற்கு அவர் உங்களை வழிநடத்துவார். ஜெபத்தின் மூலமாக, தேவனுடைய மகிமையான வழிகள் உங்களுக்குத் திறக்கும். நீங்கள் பரிசுத்த ஆவியானவர் மூலமாக நீதிமானாக, சந்தோஷம் சமாதானமுள்ளவராக மாறு வீர்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களைக் கட்டியெ ழுப்பி, பாதுகாத்து, வல்லமையாய் நிலைவரப்படுத்தி, கனப்படுத்துவார். ஆகவே, உங்களை பூரணமாக தேவனுக்கு அர்ப்பணியுங்கள். தேவனுடைய சித்தம் உங்கள் வாழ்வில் நிறைவேற்றப்படும்போது, உங்கள் பாதையில் வெளிச்சம் பிரகாசிக்கும்; நீங்கள் ராஜரீக சிங்காசனத்தை நோக்கி நடத்தப்படுவீர்கள்.

**ஜெபம்:**

**தகப்பனே, உம்முடைய வழியை எனக்குக் காட்டுவீராக. நான் என்னையே உமக்கு அர்ப்பணிக்கிறேன். இந்த ஆண்டு நான் உம்முடைய பரிசுத்த ஆவியுடன் ஒன்றாய் இருக்கவும், கல்வாரி சிலுவையில், இயேசு தமது தியாகத்தின் மூலம் எனக்காக ஆயத்தம் பண்ணின வழியில் நான் நடக்கவும் எனக்கு உதவி செய்யும். நீர் என்னை நிலைவரப்படுத்தி, கட்டியெழுப்பி, உம்முடைய வல்லமையினால் மீட்டெடுத்து, சமாதானத்தின் நாட்களையும், பரிசுத்த ஆவிக்குள்ளான நீதியில் நடக்கும் சந்தோஷத்தையும் அருளும். ஆண்டவரே, இந்த ஆசீர்வாதத்திற்காக உமக்கு ஸ்தோத் திரம். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.**

Scan QR code to watch this message



2021-ம் ஆண்டு

ஆண்டவர் ஊழியத்தில் செய்த

# மகத்தான கிரியைகள்

## உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...

**ஊழியத்தில் என் உடன் பங்காளரே,**

**இயேசு கிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களுக்கு அன்பின் புத்தாண்டு 2022 வாழ்த்துதல்கள்!**


2022 புத்தாண்டுக்குள் அடியெடுத்து வைக்கும்பொழுது, அல்பாவும் ஓமேகாவும் நம்முடைய காலங்களை தம்முடைய கரங்களில் வைத்திருக்கிறவருமான தேவனை நோக்கி கண்களை ஏறெடுக்குமாறு உங்களை உற்சாகப் படுத்துகிறேன். நீங்கள் பல சவால்களை எதிர்கொண்டிருக்கலாம். உங்கள் வாழ்வில் பல பகுதிகள் அசைக்கப்பட் டிருக்கலாம். ஆனால், ‘‘கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக’’ (1 பேதுரு 5:10) என்ற இந்த ஆண்டிற்கான வாக்குத்தத்தத்தின்படியே நீங்கள் நிலைவரப்படுத்தப்படுவீர்கள். ஆகவே தைரியமாயிருங்கள்.

கோவிட்-19 பாதிப்பு, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு இடுக்கண் மத்தியிலும் தியாகமான காணிக் கைகளை வழங்கும் உங்களை எண்ணி என் உள்ளம் உண்மையில் மகிழ்ச்சியால் நிரம்புகிறது. ‘‘பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும், நான் என் முழுப் பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும், அது வேண்டியதா யிருக்கிறது’’ (சங்கீதம் 16:3) என்று சங்கீதக்காரன் கூறுகிறபடி, தேவனுடைய பணிக்கென நீங்கள் அவரது கரங்களில் கொடுத்துள்ள ஒவ்வொரு ரூபாய்க்கும் ஏற்ற பலனை தேவனே உங்களுக்கு அருளிச்செய்வார். தேவன் உங்களில் பிரியமாயிருப்பார். இந்த ஆண்டு நீங்கள் தேவனிடமிருந்து பதில்களை பெற்றுக்கொள்வீர்கள்; தேவன் உங்களுக் கென்று ஆயத்தம்பண்ணியிருக்கிற வாக்குத்தத்தமான தேசத்தில், இடத்தில் நீங்கள் நிலைநிறுத்தப்படுவீர்கள். ‘ஒரு ஆத்துமாவும் கெட்டுப்போகக்கூடாது’ என்ற இலக்கோடு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவின்மேல் கண்களை பதித்து, பங்காளர்களுக்கு ஊழியம் செய்துள்ள சேவைகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

# ஒரு ஆத்துமாவும் கெட்டுப்போகக்கூடாது













## ஜெப கோபுரங்கள் - ஜனங்களுக்காக பிரார்த்தனை

**“நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங் களையும் பண்ணவேண்டும்.”** (1 தீமோத்தேயு 2:1)

கொரோனா பாதிப்பின் காலத்திலும்கூட ஜெப கோபுரங்கள் திறந்திருந்தன. ஜனங்கள் தேவனுடைய பிரசன்னத்தை, ஆறுதலை, சந்தோஷத்தை அனுபவிக்க முடிந்தது. ஜெப வீரர்கள், கள ஸ்தானாபதிகள், வியாதிப் பட்டு மருத்துவமனையில் அல்லது வீடுகளில் இருந்த வர்களை சந்தித்து, அவர்கள் சுகமடைவதற்காக ஜெபிப் பதில் முன்கள பணியாளர்கள்போல் உழைத்தனர்.

- ✦ மாநில மற்றும் மாவட்ட தலைநகரங்கள், சிறுபட்டணங் களில் ஜெப கோபுரங்கள் அமைந்துள்ளன. இவை ஒவ் வொருநாளும் காலை 8 முதல் இரவு 8 மணி வரை ஓய்வில்லாமல் சேவைபுரிந்துவருகின்றன.
- ✦ தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, மராத்தி, குஜராத்தி மற்றும் ஆங்கில மொழிகளில் பிரார்த்தனைகள் ஏறெடுக்கப்படுகின்றன.
- ✦ வியாதி மற்றும் நோயிலிருந்து சுகம் பெறுவதற்கு, அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு, விபத்து நேரங்களில், பொருளாதார நெருக்கத்தின்போது, தேர்வு நேரத்தில், தம்பதியரிடையே கருத்துவேறுபாடு ஏற்படும்போது, குடும்ப உறவுகளில் பிரச்னை எழும் போது என்று எந்தச் சூழலில் ஜெப உதவி தேவைப்பட்டா லும், உடனே தொலைபேசி மூலம் ஜனங்கள் தொடர்பு கொண்டு ஜெப உதவி பெறுகின்றனர். ஆண்டவர் ஜெபத்தைக் கேட்டு, அற்புதங்களையும், அதிசயங்களை யும் மக்கள் வாழ்வில் நடப்பிக்கிறார்.
- ✦ ஜெபக் குறிப்புகளுக்காக 24 மணி நேர சங்கிலி ஜெபத்திலும் பிரார்த்தனை ஏறெடுக்கப்படுகிறது.

## தொலைபேசி ஜெப கோபுரம்

- ✦ 47,71,032 பேர் தொலைபேசி மூலம் ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டுள்ளனர்.
- ✦ பல்வேறு தேவைகளில் ஏறெடுக்கக்கூடிய பதிவு செய்யப்பட்ட குரல் பிரார்த்தனை மூலம் 2,73,268 பேர் ஆசீர்வாதம் பெற்றுள்ளனர்.
- ✦ நேரடி ஜெப சேவையில் 300 முழு நேர ஜெப வீரர்க ளும், தொலைபேசி ஜெப சேவையில் 90 முழு நேர ஜெப வீரர்களும் ஆண்டவருக்கு ஊழியம் செய்துவரு கின்றனர். 700 தன்னார்வ ஜெப வீரர்களும் ஊழியம் செய்வதால், மொத்தத்தில் 1000 பேர் ஜெப கோபுரத்தில் ஆண்டவருக்கு ஊழியம் செய்து வருகின்றனர்.
- ✦ கணினி மூலம் தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ளும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.
- ✦ ஜெப கோபுரத்திலிருந்து 1580336 பேரை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டுள்ளோம்.
- ✦ ஜெப கோபுரத்திலிருந்து 753462 பங்காளர்களை, அவர்களது பிறந்தநாள், திருமணநாளின்போது தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்து, அவர்க ளுக்காக ஜெபித்துள்ளோம்.
- ✦ ஜெப கோபுரங்களில் நடைபெற்ற கூட்டங்களில் 516013 பேர் பங்கேற்றுள்ளனர்.
- ✦ இணையத்தின் மூலம் 39816 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.
- ✦ ஜெப கோபுரங்களின் மூலம் நடத்தப்பட்ட இணையவழி கூட்டங்களில் 10,98,026 பேர் பங்கேற்றுள்ளனர்.
- ✦ 1314982 பேர் ஜெப கோபுரத்திற்கு நேரில் வந்து ஆலோசனை மற்றும் ஜெப உதவி பெற்றுள்ளனர்.
- ✦ 68810 இல்லங்களை சந்தித்துள்ளோம்.
- ✦ 1374216 ஜெப எண்ணெய் குப்பிகள் விநியோகிக் கப்பட்டுள்ளன.
- ✦ ஜெப உதவி நாடி 600882 பேர் ஜெபக்குறிப்புகளை அனுப்பியுள்ளனர்.
- ✦ 3238 புதிய தன்னார்வ ஊழியர்கள் எழுப்பப் பட்டுள்ளனர்.
- ✦ 25000 சாட்சிகள் வந்துள்ளன.
- ✦ 368 புதிய ஸ்தானாபதிகள் எழுப்பப்பட்டுள்ளனர்.
- ✦ 163 இடங்களில் புதிய மிஷன் நெட்வொர்க் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.
- ✦ ஜெப வீரர்களாக சேவை புரியும்படி 2439 பங்காளர் களுக்கு பங்காளர் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### எக்காள ஜெபக் குழு

**"உன் வாயிலே எக்காளத்தை வை."** (ஓசியா 8:1)

பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டபடி, என் மனைவி இவாஞ்சலின் பால் தினகரனால் 2020 மார்ச் மாதம் எக்காள ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட்டது. இதில், தேசம் முழுவதுமுள்ள ஊழியர்கள், தன்னார்வ ஜெப வீரர்கள் பகல் 1 மணிக்கு இணையவழியில் இணைந்து, தேசத்தின்மீதும் ஜனங்கள் மீதும் தேவனின் ஆசீர்வாதமும் செழிப்பும் இறங்கும்படி ஜெபித்து வருகின்றனர். இப்பிரார்த்தனை தற்போது 700 நாட்களை கடந்து நடந்து வருகிறது.

✦ எக்காள ஜெபக்குழுவில் மொத்தம் 8000 ஜெப வீரர்கள், ஜெப வீராங்கனைகள் இணைந்துள்ளனர்.

### தொலைக்காட்சி ஊழியம்


**"தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும்...இருக்கிறது."** (எபிரெயர் 4:12)

ஃபேமிலி சேனல் மூலம் அறிவிக்கப்படும் தேவனுடைய வார்த்தையால், குடும்பத்தினரின் ஆவி இணைக்கப்படுகிறது. அவர்கள் ஒரே ஆவிக்குரிய குடும்பமாக தேவனுடைய அன்பை தங்கள் வாழ்வில் கொண்டாடுகிறார்கள். இவ்வாறு ஃபேமிலி சேனல் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு பெருத்த ஆறுதலாக விளங்கி வருகிறது.


✦ வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் சாமுவேல் தினகரன், Dr. ஷில்பா தினகரன் மற்றும் ஸ்டெல்லா ரமோலா ஆகியோர் இரவு 9 மணிக்கு வாலிபருக்கான நேரலை நிகழ்ச்சியை நடத்துகிறார்கள்.

✦ நானும் என் மனைவியும் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு தமிழிலும் 9:30 மணிக்கு மற்ற மொழிகளிலும் நேரலை நிகழ்ச்சியை நடத்துகிறோம்.

✦ ஃபேமிலி சேனலை பல லட்சக்கணக்கானோர் பார்த்து ஆசீர்வாதம் பெற்று வருகின்றனர்.






✦ ஃபேமிலி சேனல், 10 கேபிள் இணைப்பு நிறுவனங்கள், இயேசு அழைக்கிறார் இணையதளம், ஆண்ட்ராய்டு மற்றும் ஐஓஎஸ் செயலிகள், ஆண்ட்ராய்டு ஸ்மார்ட் டி.வி, அமேசான் ஃபயர் டி.வி மூலம் ஒளிபரப்பப்படுகிறது.

✦ தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தமிழ், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய 7 மொழிகளில் தயாரிக்கப்படுகின்றன.

✦ 'இயேசு அழைக்கிறார்' இணைய வானொலி தினந்தோறும் 24 மணி நேரமும் ஒலிபரப்பாகிறது.

✦ வானொலி நிகழ்ச்சிகள் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் SLBC மற்றும் இலங்கையின் PRI பண்பலையில் ஒலிபரப்பாகின்றன.

### டிஜிட்டல் மீடியா ஊழியம்

**"இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை."** (ஏசாயா 59:1)

ஃபேஸ்புக், யூடியூப், டுவிட்டர் உள்ளிட்ட சமூக ஊடக தளங்கள் மூலம், கர்த்தருடைய கரங்கள் ஜனங்களை மீட்கும்படியாய் அவர்களை தொடுகின்றன. டிஜிட்டல் தளம் தேவனுடைய வார்த்தையை சத்தியம் என்று நிரூபிக்கிறது. சமூக ஊடக தளங்கள் மூலம் பெறப்படும் ஜெபக் குறிப்புகளுக்கு ஜெபத்துடன் பதில் அளிக்கப்பட்டு வருகிறது.

✦ ஃபேஸ்புக் கணக்கை 35,01,031 பேர் பின்தொடருகின்றனர். இதன் மூலம் 15,806,312 பேர் தொடப்பட்டுள்ளனர்.

✦ இன்ஸ்டாகிராம் மூலம் 11,58,603 பேர் தொடப்பட்டுள்ளனர். இந்தக் கணக்கை 2,13,453 பேர் பின்தொடருகின்றனர்.

✦ டுவிட்டர் மூலம் 82,928 பேர் தொடப்பட்டுள்ளனர். நம் டுவிட்டர் கணக்கை 22,963 பேர் பின்தொடருகின்றனர்.

✦ நம் இணையதளத்தை ஏறத்தாழ 11,22,872 பேர் பார்க்கின்றனர்.

✦ யூடியூப் மூலம் 3,91,16,100 பேர் தொடப்பட்டுள்ளனர். நம் யூடியூப் கணக்கினை 9,08,147 பேர் சப்ஸ்கிரைப் செய்துள்ளனர்.

✦ நம் வாட்ஸ்அப் கணக்குக்கு 25,259 பயனர்கள் உள்ளனர். சராசரியாக 84,249 முறை பார்க்கப்படுகிறது.

✦ SMS மற்றும் வாட்ஸ்அப் மூலம் தினசரி வாக்குத்தத்த வசனங்கள் அனுப்பப்படுகின்றன.

✦ மொபைல் செயலிகள் மூலம் 89,746 பேர் தொடப்பட்டுள்ளனர்.

### டைனமிக் சிறுவர் முகாம்

**"சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்;**

**தேவனுடைய வார்த்தையால் குடும்பத்தினரின் ஆவி இணைக்கப்படுகிறது. இவ்வாறு ஃபேமிலி சேனல் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு பெருத்த ஆறுதலாக விளங்கி வருகிறது.**

THE Lord HAS DON

பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.'' (மத்தேயு 19:14)


டைனமிக் சிறுவர் முகாம் மே மாதம் 10 முதல் 16-ம் தேதி வரைக்கும், அனைத்து ஜெப கோபுரங்களிலும் நடத்தப்பட்டது. அதன் மூலம் ஆயிரக்கணக்கான சிறு பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

**மின்னஞ்சல், கடிதம் மற்றும் பத்திரிகை ஊழியம்**

**''ஏற்றகாலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!''** (நீதிமொழிகள் 15:23)

- 5,83,687 கடிதங்களுக்கு ஜெபத்துடன், ஏற்ற வேத வசனங்களுடன் பதில் அனுப்பப்பட்டுள்ளது.
- அநேகர் தங்கள் வாழ்வில் தேவனுடைய சித்தத்தைக் குறித்த வழிநடத்துதலுக்காக நாடினர். பரிசுத்த







ஆவியானவரின் வழிநடத்துதலின்படி ஜெபத்துடன் அவர்களுக்கு ஆலோசனைக் கூற ஆண்டவர் எனக்கு உதவினார்.
- பங்காளர்களுக்கு 3,35,167 மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டுள்ளன.
- மாதந்தோறும் பத்திரிகையின் மின்னிதழ் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது. இயேசு அழைக்கிறார் இணையதளத்தில் டிஜிட்டல் பத்திரிகையை வாசிக்கலாம்.
- 'இயேசு அழைக்கிறார்' பத்திரிகை மாதந்தோறும் 7 மொழிகளில் மொத்தம் 4 லட்சம் பிரதிகள் அச்சிடப்படுகின்றன.

**கொரோனா தடுப்பு ஜெப சேனை (CRPF)**

**''நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு... ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்.''** (யாக்கோபு 5:16)

கொரோனாவால் பாதிக்கப்பட்டு ஜெபக்குறிப்பு அனுப்பும் ஒவ்வொருவரும் நோயிலிருந்து விடுபட்டு, பரிபூரண சுகமடையும்படி ஜெபிப்பதற்காக 288 ஜெப வீரர்கள் இணைந்த வாட்ஸ்அப் குழு செயல்படுகிறது. ஒமைக்ரான் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்படும்படியும் தொடர்ந்து பிரார்த்தனைகள் ஏறெடுக்கப்பட்டு வருகின்றன.

**கொரோனா நிவாரண உதவி**

**''நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.''** (யாக்கோபு 5:16)

- கோயம்புத்தூர் பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள காருண்யா கல்வி அறக்கட்டளை வளாகம் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க பயன்படுத்தப்படுகிறது.
- சீஷா தொண்டு நிறுவனம் மூலம் கொரோனா தடுப்பு முயற்சியாக, முகக்கவசங்கள் மற்றும் கை சுத்திகரிக்கும் திரவம் ஆகியவை வழங்கப்பட்டன.
- கோயம்புத்தூர் காருண்யா நகரிலுள்ள சீஷா மருத்துவமனையில் கொரோனா சிகிச்சைக்கென சிறப்பு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- என்னுடைய தந்தை சகோ. டி.ஜி.எஸ். தினகரன் அவர்களின் பிறந்தநாளை நினைவுகூரும்வண்ணம், ஜூலை 1-ம் தேதி, சீஷாவின் சார்பில் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் உலகின் பல பகுதிகளில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.
- கொரோனா பெருந்தொற்றின் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட ஏழைகள், திக்கற்ற விதவைகள், முதியோர், குழந்தைகள், மூன்றாம் பாலித்தனவர்களுக்கும், ஆட்டோ ஓட்டுநர்களுக்கு அத்தியாவசியமான உணவு பொருட்கள், தையல் இயந்திரங்கள், கல்வி உபகரணங்கள் அடங்கிய புத்தக பை (ஸ்கூல் கிட்), புத்தாடைகள் ஆகியவையும் மற்றும் தையல் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
- 2021 செப்டம்பர் 12-ம் தேதி, கோயம்புத்தூர், செப்டம்பர் 25-ம் தேதி சென்னை ஆகிய நகரங்கள் மற்றும் கிராமப்புறங்களில், தொற்று நோயிலிருந்து பாதுகாக்கப்படுவதற்காக மாபெரும் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டன.

**பிரார்த்தனை கலாசாலை மற்றும் பயிற்சி**

**''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது;... அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.''** (2 தீமோத்தேயு 3:16)

- ஊழியத்திற்காக கொடுத்துத் தாங்குகிற ஒவ்வொரு பங்காளரும், ஜெபிக்கிற பங்காளராக மாறவேண்டும் என்ற தரிசனத்தோடு 'தேவனோடு இணைக்கப்பட்டிருத்தல்' என்ற தலைப்பில், பங்காளர் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இது ஆறு வார கால பயிற்சியாகும். அனைத்து ஜெப கோபுரங்களிலும் வழங்கப்படும் இந்தப் பயிற்சிக்கு கட்டணம் கிடையாது. பெருமளவில் பேசப்படும் பல மொழிகளிலும் இந்தப் பயிற்சி வழங்கப்படுகிறது.
- இதுவரை இந்தியா முழுவதும் ஆயிரக்கணக்கானோர் பயிற்சி பெற்றுள்ளனர்.
- 'இயேசுவை அறிந்துகொள்ளுதல்' என்ற 10 வார படிப்பு இணையவழியில் (ஆன்லைன்) வழங்கப்படுகிறது. நான் தயாரித்துள்ள வீடியோ வடிவிலான ஆழமான 10 பாடங்கள் இதில் போதிக்கப்படுகின்றன. (இணைப்பு: *academy.prayertoweronline.org*)
- முதல் அணியில் 1075 பேர் 'இயேசுவை அறிந்துகொள்ளுதல்' படிப்பை முடித்துள்ளனர். இரண்டாவது அணிக்கான பயிற்சி நடைபெற்று வருகிறது.

**காருண்யா அகாடமி இறையியல் கல்வி (KATE)**

**''தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள்மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தவும்...''** (ரோமர் 9:23)

- காருண்யா அகாடமி இறையியல் கல்வி, 2020 செப்டம்பர் 4-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. இது, இறை

யியல் கல்வி அளிப்பதில் வெற்றிகரமாக ஓராண்டை நிறைவு செய்துள்ளது. பெருந்தொற்றின் மத்தியிலும் முதல் அணியில் 44 பேர், இரண்டாம் அணியில் 91 பேர் என மொத்தம் 135 மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

- Asia Theological Association (ATA) அமைப்பின் Candidacy status என்ற அங்கீகாரத்தை இது பெற்றுள்ளது.
- ஆலோசனை, ஊழியம், அருட்பணி, பெண்கள் தலைமைத்துவம் மற்றும் மேலாண்மை ஆகியவற்றில் B.Th., M.Div., டிப்ளமோ படிப்புகளும், 'உங்கள் வேதாகமத்தை அறிந்துகொள்ளுங்கள்' மற்றும் கிரேக்க மொழி போன்ற முக்கிய தலைப்புகளில் குறுகிய கால படிப்புகளும் வழங்கப்படுகின்றன.
- 'உங்கள் நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள்' என்ற தலைப்பில், 8 பயிற்சிகள் மூலம் கல்லூரி மாணவ மாணவியர் 621 பேரை ஊக்கப்படுத்தியுள்ளோம்.
- உத்தம ஊழியர்கள் பயிற்சியின் மூலம் 250 போதகர்களுக்கு அறக்கட்டளையை பதிவு செய்தல் மற்றும் மீடியா ஊழியத்தில் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- மாதந்தோறும் காருண்யாவை சேர்ந்தவர்களுக்கு AVEQ என்ற முன்னிரவு பிரார்த்தனை நடத்தப்படுகிறது. இங்கு பயிலும் மாணவர்களுக்கு இறையியல் கல்வியோடு, பணித்தள அனுபவத்திற்காக சமுதாய சேவை, மாணவர் ஐக்கியம், ஜெப கோபுர ஊழியம் ஆகிய வாய்ப்புகளும் வழங்கப்படுகிறது. இவற்றை செய்வதற்கு கிருபையளிக்கும் தேவனை துதிக்கிறேன்.

### எஸ்தர் ஜெபக் குழு

**"சமாதானத்துடனே போ; நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக."** (1 சாமுவேல் 1:17)

- எஸ்தர் ஜெபக்குழுக்களில் பெண்களும், வாலிப பெண்கள் எஸ்தர் ஜெபக்குழுக்களில் இளம் பெண்களும், ஜூனியர் எஸ்தர் ஜெபக் குழுக்களில் சிறுபிள்ளைகளும், தம்பதியர் எஸ்தர் ஜெபக்குழுக்களில் தம்பதியரும், மாதத்தில் ஒருமுறை சிறு சிறு குழுக்களாக ஒன்றுகூடி ஜெபிக்கின்றனர். பொது முடக்கக் காலத்திலும் கூட்டு தொலைபேசி அழைப்புகள் மூலமும், ஏனைய தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தியும் இணைந்து ஜெபித்தனர்.
- இந்தியாவில் மொத்தம் 1200 எஸ்தர் ஜெபக்குழுக்கள் செயல்படுகின்றன. இதுதவிர 17 நாடுகளில் 75 எஸ்தர் ஜெபக்குழுக்கள் செயல்படுகின்றன.
- இந்தியா மற்றும் வேறு நாடுகளில் செயல்படாமல் இருக்கிற எஸ்தர் ஜெபக் குழுக்களுக்கான மாதத்தின் மூன்றாம் சனிக்கிழமையில் என் தாயார் Zoom சந்திப்புகளில் விசேஷித்தவண்ணம் ஜெபிக்கிறார்கள்.

### UTurn ஊழியம்

**"உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்."** (அப்போஸ்தலர் 2:17)

- இந்தியா முழுவதும் 94 UTurn கிளப் செயல்படுகின்றன. வாலிபருக்காக நேரடி மற்றும் இணையவழி கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அநேகர் அற்புதங்களைப் பெற்று தேவ நாம மகிமைக்காக சாட்சி கூறுகின்றனர்.
- சமூக ஊடகங்களில் நடத்தப்படும் புதுமையான நிகழ்ச்சிகள் மூலம் வாழ்வில் மாற்றம் பெற்றவர்கள் அநேகரின் சாட்சிகள் வருகின்றன.
- 17,654 பேர் புதிதாக நம்முடைய சமூக வலைத்தள கணக்குகளை சப்ஸ்கிரைப் செய்துள்ளனர்.
- சாமுவேல் தினகரன், Dr. ஷில்பா தினகரன் மற்றும் ஸ்டெல்லா ரமோலா ஆகியோர் குறிப்பிட்ட தலைப்பு சார்ந்து, ஃபேமிலி சேனல் மற்றும் சமூக ஊடக தளங்களில் நடத்தும் நேரடி நிகழ்ச்சிகள், இளைஞர்கள் அன்றாடம் ஏற்படும் பிரச்னைகளை எதிர்கொள்ள உதவுகின்றன.
- இன்ஸ்டாகிராம் மூலம் 19,899 பேரும், டுவிட்டர் மூலம் 4,447 பேரும், ஃபேஸ்புக் மூலம் 79,674 பேரும், யூடியூப் மூலம் 85,593 பேரும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர்.
- சமூக ஊடக தளங்களில் பதிவு மற்றும் வீடியோக்களை பதிவேற்றம் செய்து இளைஞர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் சவால்களையும், போராட்டங்களையும் தேவ வல்லமையினால் தீர்வு காண நடைமுறை ஆலோசனைகளை வழங்குகிறோம்.

### இசை ஊழியம்

**"சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு..."** (எபேசியர் 5:19)

- கிறிஸ்துமஸை முன்னிட்டு 'அவரே' என்ற விசேஷித்த பாடலை வெளியிட சாமுவேல் தினகரனுக்கு ஆண்டவர் கிருபை செய்தார் (இணைப்பு: https://www.youtube.com/watch˜v=kqy7DWwMqug). ஸ்டெல்லா ரமோலாவுக்கு கிருபை பாராட்டினார். பாடல்கள் லட்சக்கணக்கான இளைஞர், இளம் பெண்களை தொட்டன.
- மனதை மகிழ்ச்சியாக்கும் குடும்ப பாடலை கிறிஸ்துமஸின்போது யூடியூப் தளத்தில் வெளியிட கர்த்தர் கிருபை செய்தார்.









### விடுதலையின் நாள் ஜெபம்

**"இப்பொழுதே இரட்சணிய நாள்."** (2 கொரிந்தியர் 6:2)

மாதந்தோறும் கடைசி சனிக்கிழமை நானும் என் மனைவியும் ஃபேமிலி சேனல் மற்றும் சமூக ஊடக தளங்களில் விடுதலையின் நாள் ஜெபத்தை நடத்துகிறோம். ஜெப கோபுரங்கள், மின்னஞ்சல், ஃபேஸ்புக் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் வந்து சேருகின்ற ஜெபக் குறிப்புகளுக்காக ஜெப வீரர்கள் ஜெபிக்கிறார்கள்.









அவற்றிற்கான பதிலை அனுப்பி வைக்கிறோம்.

### பெதஸ்தா புதுப்பித்தல் பணி

**"இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்; இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம்பண்ணுவேன்."** (சங்கீதம் 132:14)

உங்கள் உதாரத்துவமான காணிக்கையால் புதுப்பிக்கும் பணி மூன்றில் ஒரு பங்கு நிறைவடைந்துள்ளது (இணைப்பு: https://prayertoweronline.org/blessing-plans/bethesda-build-gods-house)

### தேசிய ஜெப கோபுரம், டெல்லி

**"நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங்குறித்துத் தீர்க்க தரிசனஞ்சொல்லவேண்டும்."** (வெளிப்படுத்தல் 10:11)

- இந்திய தேசத்திற்காக ஒவ்வொருநாளும் இடைவிடாது இரவு, பகல் 24 மணி நேரமும் பிரார்த்தனை ஏறெடுக்கப்படுகிறது.
- உலகம் முழுவதிலுமிருந்து ஜெப வீரர்கள் தன்னார்வமாக வந்து தங்கி ஜெபிக்கின்றனர்.
- பொதுமுடக்கக் காலத்தில் டெல்லியைச் சேர்ந்த 52 ஜெப வீரர்கள் இந்த சங்கிலி ஜெபத்தில் ஜெபித்தனர்.
- பொது முடக்கம் தளர்த்தப்பட்ட பிறகு 20 மாநிலங்களிலிருந்து மொத்தம் 72 ஜெப வீரர்கள் 5 அணிகளாக தேசிய ஜெப கோபுரத்தில் ஜெபித்துள்ளனர்.

### ZOOM ஜெப ஊழியம் - நம்பிக்கையின் நேரம்

**"காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்."** (எபேசியர் 5:16)

ஞாயிறுதோறும் இரவு 7 மணிக்கு நானும் என் மனைவியும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஹிந்தி மொழிகளில் நடைபெறும் Zoom சந்திப்புகளில் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டு ஜெபிக்கிறோம்.

### கிறிஸ்துமஸ் வெகுமதிகள்

**"உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்ததின்படி... அவனுக்குத் தாராளமாய்க் கொடுத்து அனுப்பிவிடுவாயாக."** (உபாகமம் 15:14)

ஜெப கோபுரங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் பங்காளர்களின் வீடுகளுக்கு அவர்களது அனுமதியின் பேரில் ஜெப வீரர்களும் ஸ்தானாபதிகளும் நேரில் சென்று கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து இயேசு அழைக்கிறார் காலண்டர்கள் மற்றும் டைரிகளை வெகுமதியாக அளித்தனர். நேரில் சந்திக்க முடியாத பங்காளர்களுக்கு காலண்டர்களும் டைரிகளும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. கிறிஸ்துமஸ் காலத்தில் ஜெப வீரர்களும் ஸ்தானாபதிகளும் இந்தியா முழுவதும் 25000 பங்காளர் குடும்பத்தினரை சந்தித்தனர்.

### போட்காஸ்ட் (PODCASTS)

**"விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்."** (ரோமர் 10:17)

பல்வேறு ஒலிபரப்பு தளங்களில் பகிரப்படும் என்னுடைய தினசரி ஒலிபரப்புகள் (podcasts) மூலம் உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகின்றனர்.

### புத்தகங்கள்

**"ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும்"** (ரோமர் 12:7)

என்னுடைய தாயார் சகோதரி ஸ்டெல்லா தினகரன் எழுதியுள்ள "நான் அவரைக் கண்டேன்" புத்தகமும் Dr. ஷில்பா தினகரன் எழுதியுள்ள "உள்ளும் புறமுமான அழகு" என்ற புத்தகமும் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி மற்றும் தெலுங்கு மொழிகளில் வெளி வந்துள்ளன. "கிறிஸ்துவோடு இசைந்த இல்லற வாழ்வு" என்ற என் தாயார் எழுதியுள்ள புத்தகத்தின் தமிழ் பதிப்பு 2021 ஆகஸ்ட் 15-ம் தேதி வெளியிடப்பட்டது.

### தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு உதவி

**"உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்."** (2 கொரிந்தியர் 9:7)

'இயேசு அழைக்கிறார்' ஊழியம், ஆரம்ப காலத்திலிருந்தே ஆலயங்கள் கட்டுவதற்கும், நலிவுற்ற மக்களுக்குச் சேவை செய்யும் அமைப்புகளை உருவாக்குவதற்கும் போதகர்கள் மற்றும் சுவிசேஷகர்களுக்கு உதவி செய்து வருகிறது.

### பிரார்த்தனை திருவிழாக்களும் ஆசீர்வாதக் கூட்டங்களும்

தேசத்தின் க்ஷேமத்திற்காகவும், செழிப்புக்காகவும் பிரார்த்தனை திருவிழாக்களையும் ஆசீர்வாதக் கூட்டங்களையும் நடத்துவதற்கு தொடர்ந்து ஜெபித்து எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம்.

### சர்வதேச ஊழியம்

**"...நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."** (மாற்கு 16:15)

- இஸ்ரேல் ஜெப கோபுரத்தின் 8-வது ஆண்டு விழாவை, காணொலி (virtual) மூலம் கொண்டாடி, தேசங்கள் எங்கும் பரவி வரும் தேவ மகிமைக்காய் அவரை ஸ்தோத்திரித்தோம். ஜெருசலேம் பட்டணத்திலுள்ள இஸ்ரேல் ஜெப கோபுரத்தில் உலகம் முழுவதிலுமிருந்து வரும் ஜெப வீரர்கள், இஸ்ரேலின் சமாதானத்திற்

காகவும், உலக மக்கள் ஆண்டவரின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகும்படியும் ஜெபிக்கிறார்கள்.

- சர்வதேச ஜெப கோபுரங்கள் - ஜனங்களின் தேவைகளின்போதும், அவசர சூழ்நிலைகளின்போதும் அவர்களுக்காக ஜெபிக்கும்படி தொலைபேசி ஜெப கோபுர சேவை 24 மணி நேரமும் எல்லா நாட்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆசீர்வாதக் கூட்டங்கள் Zoom மூலம் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

**ஆண்டவருக்கே சகல துதியும் மகிமையும் உண்டாவதாக!**

இந்த ஆண்டும் தொடர்ந்து ஊழியத்தைத் தாங்கும்படி உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஊழியர்களுக்கு ஊதியம், தொலைபேசி ஜெப கோபுரத்திற்கான தொழில்நுட்ப சாதனங்கள் பராமரிப்பு, கணினி பராமரிப்பு, ஜெப கோபுரங்கள் இயங்கும் கட்டடங்களுக்கு வாடகை, உள்கட்டமைப்பு, ஜெப வீரர்களுக்கு பயிற்சி, SMS அனுப்புதல், தேசம் முழுமைக்கான தனியார் தொலைபேசி இணைப்பு செலவு, தபால் செலவு ஆகியவை, உங்களைப் போன்ற அன்பு பங்காளர்கள் அனுப்பும் காணிக்கையிலிருந்தே சந்திக்கப்படுகின்றன.

பல்வேறு வழிகளில் ஜெபக்குறிப்பு அனுப்பும் அன்பானவர்களுக்காக ஜெபித்தல், ஜெப கோபுரங்களுக்கு நேரில் வருபவர்களுக்காகவும், தொலைபேசி மூலம் தொடர்புகொள்பவர்களுக்காகவும் ஜெபித்தல் ஆகிய சேவைகள் உங்களைப் போன்ற பங்காளர்களின் உதவியோடு இலவசமாக செய்யப்படுகின்றன. இந்த சேவைகளை நீங்கள் தொடர்ந்து தாங்கும்பொழுது, தேவன் இந்த ஆத்துமாக்களை உங்கள் பரலோக கணக்கில் எழுதுவார். ஜெப கோபுர ஊழியத்தைத் தொடர்ந்து தாங்கி, கோடிக்கணக்கான மக்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கும்படி உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

## பரிசுத்தவான்களுக்கு வெகுமதி

### இந்த தருணத்தில் நீங்கள் யாருக்கு வெகுமதி அளிக்க இருக்கிறீர்கள்?

ஜெப வீரர்கள், இரவும் பகலும் இடையறாமல் உண்மையாய் தொலைபேசி அழைப்புகளை ஏற்று, ஜெப விண்ணப்பங்களை பொறுமையோடு கேட்டு, தேவனிடமிருந்து மக்கள் அற்புதங்களைப் பெற்றுக் கொள்ளும்படி, பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஊக்கமாய் ஜெபிக்கிறார்கள். உங்கள் தியாகமான காணிக்கையை அனுப்பி, அவர்களை ஊக்கப்படுத்தும்படியாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆண்டவரே, என் செல்வம் உமக்கு வேண்டிய தாயிராமல், பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கு அது வேண்டியதாயிருக்கிறது** (சங்கீதம் 16:2,3).

பூமிக்கு வந்த தேவ குமாரனாகிய இயேசு அதைக் காட்டிலும் பன்மடங்கு உங்களை ஆசீர்வதிப்பது நிச்சயம்.

உங்களுக்காக ஜெபிக்கும்
உங்கள் அன்பு சகோதரன்,
Dr. பால் தினகரன்







**பூமிக்கு வந்த தேவ குமாரனாகிய இயேசு உங்களை ஆசீர்வதிப்பது நிச்சயம்.**







'ஜெப வீரர்களுக்கு வெகுமதி' என்ற பிரத்தியேகமான ஊழிய அம்சத்தை அறிமுகம் செய்துள்ளோம். முழு நேர ஜெப வீரர்களுக்கு வெகுமதி அளிக்க நீங்கள் விரும்பினால், உங்கள் பகுதியில் அமைந்திருக்கும் ஜெப கோபுரத்தில், 'ஜெப வீரர்களுக்கு வெகுமதி' **(Gift for Prayer Intercessors)** என்று குறிப்பிட்டு கொடுக்கலாம். **www.jesuscalls.org** என்ற இணையதளம் மூலம் அனுப்பலாம் அல்லது **044 - 23456677** என்ற எண்ணுக்கு காலை 7 முதல் இரவு 9 மணி வரை தொடர்புகொண்டு வெகுமதிக்கான நன்கொடை அளிக்கும் வழிகளைத் தெரிந்துகொள்ளலாம்.

**இயேசு அழைக்கிறார் ஜெப வீரர்களைத் தாங்குவதற்கு,**

☐ ரூ.10,000/- ☐ ரூ.5,000/- ☐ ரூ.3,000/-

☐ ரூ. ......................../- ஒரு முறை / மாதந்தோறும் / ஆண்டுதோறும் வழங்குகிறேன்.

பெயர்: ........................................................................................ பங்காளர் எண்:......................

முகவரி:..............................................................................................................................

........................................................................................ பின்கோடு:...................................

மின்னஞ்சல்:...................................................................... மொபைல்:..................................

பிறந்தநாள்:........................................................ திருமணநாள்:...........................................

**Dr. பால் தினகரனும், இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்களிலும் ஜெபிப்பதற்கான என்னுடைய தனிப்பட்ட ஜெபக்குறிப்பு:**

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

**இந்த மகத்தான ஊழியத்தைத் தாங்குங்கள்;**
**சிறப்பான ஆசீர்வாதத்தை ஆண்டவரிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.**

"சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒருகலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான்." (மத்தேயு 10:42)




**உதாரத்துவமான காணிக்கைக்கு உன்னதர் மிகுதியான பலனை அளிப்பார்**

## ஊழியத்தை தாங்கக்கூடிய எளிய வழிகள்

QR Codeஐ ஸ்கேன் செய்து அனைத்து UPI செயலிகள் மூலமும் தாங்கலாம்.

Paytm | G Pay | BHIM

scan here

JESUS CALLS

DOWNLOAD NOW

Google Play

DOWNLOAD THE JESUS CALLS APP FOR EXTENDING YOUR SUPPORT

UPI ID
UNIFIED PAYMENTS INTERFACE

*jesuscalls@indus*

***www.jesuscalls.org*** என்ற இணையதளம் மூலமும் பாதுகாப்பான முறையில் காணிக்கை அனுப்பலாம்.

வங்கி மூலம்:
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **000901056144** Bank: **ICICI Bank Ltd., Nungambakkam Branch, Chennai 600 034.**
IFS Code: **ICIC0000009**

மணியார்டர் (EMO) மற்றும் **'JESUS CALLS'** என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் / காசோலை (CTS) எடுத்து ஜெப கோபுரம், 16, *Dr.* டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, சென்னை 600 028 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரத்திற்கு நேரில் சென்று தாங்கலாம்.

**BANK TRANSFER** விவரங்களை *admin@jesuscalls.org / partnercare@jesuscalls.org* என்ற மின்னஞ்சல் முகவரிகளுக்கு தயவாய் தெரியப்படுத்துங்கள்

**+91 90154 55455** என்ற எண்ணுக்கு மிஸ்டுகால் **(Missed Call)** கொடுத்தால் மேலும் விவரங்களை அளித்து ஊழியக் குழுவினர் உதவிபுரிவார்கள்.



# அற்புதங்களின் தேவன்

"கர்த்தாவே, ... பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?"

(யாத்திராகமம் 15:11)

**ஆம், மேற்கண்ட வசனத்தில் வேதம் கூறுவதுபோல, தேவன் அற்புதங்களைச் செய்வதில் மகத்துவமுள்ளவராயிருக்கிறார். நீங்கள் இதை அற்புதங்களை நம்புகிறீர்களா? தேவன் அன்பானோர் வாழ்வில் செய்த வல்லமையான கிரியைகளில் சிலவற்றை கீழேத் தருகிறோம். இவை நிச்சயமாகவே உங்கள் விசுவாசத்தைக் கட்டியெழுப்பும். தேவன் இன்றும் அற்புதங்களைச் செய்கிறார்; உங்களுக்கும் செய்வார்.**

## வெற்றியின்மேல் வெற்றி

நான் 'இயேசு அழைக்கிறார்' ஊழியத்தில் இளம் பங்காளராக இணைந்துள்ளேன். எந்த பிரச்னை வந்தாலும் என் குடும்பத்தினர் ஜெபத்திற்காக 'இயேசு அழைக்கிறார்' ஊழியத்தை நாடுவது வழக்கம். பெருந் தொற்றின் காரணமாக நான் எழுதவேண்டிய நுழைவுத் தேர்வு மற்றும் மதிப்பெண்களைக் குறித்து மிகவும் பயந்துகொண்டிருந்தேன். ஆகவே, 'இயேசு அழைக்கிறார்' ஜெப கோபுரத்திற்கு வந்தேன். ஜெப வீரர்கள் எனக்காக ஜெபித்து என்னை தைரியப்படுத்தினார்கள். என்னுடைய ஜெபக்குறிப்பை Dr. பால் தினகரனுக்கும் அனுப்பி வைத்தனர். சில நாட்களுக்குப் பிறகு, எதிர்பாராத வண்ணம் Dr. பால் தினகரன் தொலைபேசி மூலம் என்னை அழைத்து, என்னுடைய தேர்வுகளுக்காகவும், எதிர்காலத்திற்காகவும் ஜெபித்தார். அதனால் பயத்தை மேற்கொள்ளக்கூடிய பெலன் எனக்கு கிடைத்தது. 12-ம் வகுப்பு பொதுத் தேர்வுகளை (CBSE) எழுதினேன். ஆண்டவர் 96% (480/500) மதிப்பெண்களைக் கொடுத்து என்னை ஆசீர்வதித்தார். தொழில்நுட்ப படிப்புக்கான JEE நுழைவுத் தேர்வின் முதன்மை பிரிவையும் எழுதினேன். அதில் முதல் முறை 91, இரண்டாம் முறை 90, மூன்றாம்



முறை 89 ஆகிய மதிப்பெண்களே கிடைத்தன. ஆகவே, எனக்கு அதில் படிக்க இடம் கிடைக்கும் என்கிற நம்பிக்கையை இழந்தேன். மிகவும் அதைரியமடைந்து, திரும்பவும் 'இயேசு அழைக்கிறார்' ஜெப கோபுரத்திற்குச் சென்று எனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டேன். நான்காவது முறை அந்தத் தேர்வை எழுதினேன். அதில் 93.9% மதிப்பெண்களைக் கொடுத்து, திருச்சி NIT கல்லூரியில் இடம் கிடைக்கும்படி ஆண்டவர் அருள் புரிந்தார். எனக்காக ஜெபித்த Dr. பால் தினகரனுக்கும், ஜெப வீரர்களுக்கும் நன்றி கூறுகிறேன். தேவனுக்கே சகல மகிமையும் உண்டாவதாக.

- **V. தருண் குமார்,** ஹைதராபாத்.

## அற்புத சுகம்

எனக்கு, நிணநீர் முடிச்சு (lymphoma) புற்றுநோய் இருப்பதாக 2020 அக்டோபர் மாதம் கண்டு பிடிக்கப் பட்டது. என்னுடைய சுகத்திற்காக ஜெபிக்கும்படி Dr. பால் தினகரனுக்கு மின்னஞ்சல் அனுப்பினேன். தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறிப்பிட்டு அவரிடமிருந்து எனக்கு நல்ல பதில் வந்தது. நான் தற்போது வியாதியின் தீவிரத்தி லிருந்து குணம்பெற்று, இயல்புக்கு திரும்பியுள்ளேன். இயேசு என்னை குணமாக்கி, புதிய வாழ்க்கையை அளித்துள்ளார். தேவனுக்கே சகல மகிமையையும் செலுத்துகிறேன். எனக்காக ஜெபித்து தைரியப்படுத்திய Dr. பால் தினகரனுக்கும், இயேசு அழைக்கிறார் ஜெப வீரர்களுக்கும் நன்றி.

- **ஸ்டெஃபி ஷைன்.**

## தெய்வீக சுகம்

என்னுடைய பெற்றோருக்கும், சகோதரனுக்கும் கோவிட்-19 பாதிப்பு ஏற்பட்டது. அவர்களுக்காக ஜெபிக்கும்படி, Dr. பால் தினகரனுக்கு ஜெபக் குறிப்பு அனுப்பினேன். என் தந்தைக்கு இரத்த புரத அளவு (CRP) மிகவும் அதிகமானதினிமித்தம், அவரை மருத்துவ மனையில் அனுமதிக்கும்படி மருத்துவர் கூறியதால் நாங்கள் மிகவும் பயந்தோம். இந்நிலையில், 'இயேசு இந்த உலகில் இருந்தநாட்களில் வியாதியஸ்தர்களை சுகமாக்கியதுபோல, நித்தியரான அவர் என் குடும்பத்தை குணமாக்குவார்' என்று Dr. பால் தினகரன் பதில் அனுப்பி யிருந்தார். அந்தப் பதிலில் அவர் எழுதியிருந்தவற்றை நான் முற்றிலும் விசுவாசித்தேன். அவர் எழுதியிருந்த படியே, ஆண்டவர் இயேசு அற்புதவிதமாக என் குடும்பத்தினரை குணமாக்கினார். நோய் பாதிப்பில்லை என்று பரிசோதனை முடிவுகள் கூறின. பரிசோதனை முடிவுகளைப் பார்த்த மருத்தவர், என் தந்தையை மருத்துவமனையில் அனுமதிக்க தேவையில்லை என்று கூறிவிட்டார். சர்வவல்ல தேவனை நான் முழுமனதோடு துதிக்கிறேன். என் குடும்பத்தினருக்காக ஜெபித்த Dr. பால் தினகரனுக்கு நன்றி.

- **Dr. ருச்சிரா,** மகாராஷ்டிரா.

## உடனடியாகக் கிடைத்த சுகம்

2021, மே மாதம், என்னுடைய இடது பக்க சினைப்பையில் (ovary) கட்டியும், கர்ப்பப் பையில் நார்க்கட்டியும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. கர்ப்பப்பை வீங்கி, சுவர் தடிமனாகி, அதினிமித்தம் என் அடிவயிற்றில் பாரமாக உணர்ந்தேன். அதற்காக சிகிச்சை பெற்று வந்தேன். இந்நிலையில், 2021, ஜூன் மாதம் ஃபேஸ்புக் வழியாக நடைபெற்ற இயேசு அழைக்கிறார் அற்புத இரவு நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது, என்னுடைய அடிவயிற்றில் பாரம் குறைவதை உணர்ந்தேன். அடுத்த முறை பரிசோதனைக்கு (ultrasound) சென்றபோது, எனக்கு பாதிப்பு எதுவு மில்லை என்று பரிசோதனை முடிவு வந்தது. இந்த அற்புதத்தைச் செய்த அன்பு நிறைந்த நம் மகாதேவனுக்கு துதியுண்டாவதாக. 'இயேசு அழைக்கிறார்' ஊழியத்திற்கு நன்றி

- **ரஜ்னீஷ் டேவிட்,** கால்கா, ஹரியானா.

## கொரோனா சுகமானது

என்னுடைய உறவினர் இருவருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டதால் நாங்கள் குடும்பமாக கவலையுற்றோம். பாதிப்பு தீவிரமான நிலையில், அவர்களுக்கு நுரையீரல் பரிசோதனை (CT Scan) செய்ய வேண்டுமென்று மருத்துவர் பரிந்துரைத்தார். இந்நிலையில், 'இயேசு அழைக்கிறார்' இணையதளம் மூலம் கொரோனா தடுப்பு ஜெப சேனை குழுவில் அவர்களுக்காக ஜெபிக்கும்படி விண்ணப்பம் அனுப்பினேன். தேவன் ஜெபத்தைக் கேட்டார். பரிசோதனையில், கொரோனா நுரையீரலை பாதிக்கவில்லை என்பது தெரியவந்தது. அது எங்களுக்கு பெருத்த ஆறுதலைக் கொடுத்தது. மருத்துவர்கள் ஆச்சரியப்பட்டு, 5 நாட்களுக்குள் அவர்கள் இருவரையும் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பினர். கொரோனா தடுப்பு ஜெப சேனை எங்களுக்கு பெருத்த ஆசீர்வாதமாக உள்ளது. எங்களுக்காக ஜெபித்த அனைத்து ஜெப வீரர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன். தேவனுக்கே எல்லா மகிமையையும் செலுத்துகிறேன்.

- **G. ஏஞ்சல்.**





### ஆண்டவர் அருளிய வேலை

என் கணவர் பெயர் திரு.ஸ்லீவா ரெட்டி. அவர் 20 மாதங்கள் வேலையில்லாமல் இருந்தார். இந்நிலையில், ஆகஸ்ட் மாதம் 9-ம் தேதி, என் மகன் கோயம்புத்தூரில் உள்ள பெதஸ்தா ஜெப மையத்திற்குச் சென்று, என் கணவருக்கு வேலை கிடைக்கும்படி ஜெபிக்கக் கேட்டுக்கொண்டான். அவன் பெதஸ்தாவுக்கு சென்றதுமே ஒரு நிறுவனத்திலிருந்து என் கணவரை தொலைபேசி மூலம் அழைத்தனர். அவர் ஆகஸ்ட் 23-ம் தேதி வேலையில் சேர்ந்தார். ஜெபித்த ஜெப வீரர்களுக்கு நன்றி. ஆண்டவருக்கு ஸ்தோத்திரம்.

- **மரியா ராணி,** ஹைதராபாத்.

### புற்றுநோய் குணமானது

என்னுடைய அம்மா பெயர் திருமதி மாக்டலின். அவர்களுக்கு 5, 6 ஆண்டுகளாக கட்டிகள் இருந்தன. இருதய பரிசோனையில் இருதயத்தில் இரண்டு இடங்களில் அடைப்பு இருப்பதும் தெரிய வந்தது. ஓராண்டு கடந்த நிலையில், 2020-ம் ஆண்டு, என் அம்மாவுக்கு புற்றுநோய் பாதிப்பிருக்கலாம் என்று மருத்துவர்கள் சந்தேகித்தனர். நோய் 90% பரவியிருக்கலாம் என்றும், அறுவை சிகிச்சை மற்றும் கீமோதெரபி சிகிச்சைகளும் பலனிக்காமல் போகலாம் என்றும் மருத்துவர் கூறினார். மிகவும் கவலைக்கிடமான சூழ்நிலையில், அறுவைசிகிச்சைக்கு முன்பு, 'இயேசு அழைக்கிறார்' ஜெப கோபுரத்தை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டோம். அதன்பின்பு, எடுக்கப்பட்ட திசுப் பரிசோதனையிலும் (biopsy), இரத்தப் பரிசோதனையிலும் என் அம்மாவிற்கு புற்றுநோய் பாதிப்பு எதுவுமில்லை என்றும் பரிசோதனை அறிக்கைகள் கூறியது. என்னுடைய அம்மாவுக்கு பரிபூரண சுகமளித்த சர்வ வல்ல தேவனை மகிமைப்படுத்துகிறோம். அவர்களுக்காக ஊக்கமாக ஜெபித்த Dr. பால் தினகரனுக்கும், ஜெப வீரர்களுக்கும் நன்றி கூறுகிறோம். நன்றி காணிக்கையாக 'இயேசு அழைக்கிறார்' தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றை (sponsor) தாங்குகிறோம்.

- **ஜூலியானா அல்மெய்டா,** உடுப்பி.

## நீங்களும் அற்புதத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்

உங்கள் ஜெப விண்ணப்பங்களை தயங்காமல் paul@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, சென்னை 600 028 என்ற அஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். 'இயேசு அழைக்கிறார்' ஊழியத்தின் மூலம் விடுதலை மற்றும் ஆசீர்வாதங்களைப் பெற்றதைக் குறித்த உங்கள் சாட்சியைப் பகிர்ந்துகொள்ள விரும்பினால், மேற்கண்ட அஞ்சல் முகவரிக்கு அல்லது testimony@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 9791934442 என்ற வாட்ஸ் அப் எண்ணுக்கு அனுப்பலாம்.


## விடுதலையின் நாள்

## பெரிதான ஆசீர்வாதம்

"...உபவாசிக்கும்போது... அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்." (மத்தேயு 6:18)



நீங்கள் புத்தாண்டில் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்படும்படி, Dr. பால் தினகரன், தன் குடும்பத்தினருடனும், ஜெப வீரர்களுடனும் இணைந்து, 2022 ஜனவரி 9-ம் தேதி உபவாசித்து ஜெபிக்க இருக்கிறார். அந்த விடுதலையின் நாள் ஜெபத்தில், புத்தாண்டு முழுவதும் உங்கள் குடும்ப வாழ்வு, உடல்நலம், வேலை, படிப்பு மற்றும் பொருளாதாரத்தை ஆண்டவர் நிறைவாய் ஆசீர்வதிக்கும்படி விசேஷ பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.உங்கள் ஜெபக் குறிப்புகளை உங்கள் பகுதியிலுள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் கொடுக்கலாம் அல்லது கடிதம், மின்னஞ்சல், ஃபேஸ்புக், இணையதளம் மூலம் எங்களுக்கு அனுப்பலாம். உங்கள் ஜெபக் குறிப்புகளுக்காக Dr. பால் தினகரன் குடும்பத்தினரும், ஜெப வீரர்களும் ஜெபித்த பிறகு, ஆண்டவர் அளிக்கும் பதில் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**ஜனவரி 9, ஞாயிறு 2022**

முகவரி: Dr. பால் தினகரன், 16, டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, சென்னை 600 028
மின்னஞ்சல்: paul@jesuscalls.org இணையதளம்: www.jesuscalls.org
ஃபேஸ்புக்: www.facebook.com/PaulDhinakaranOfficial

நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்களை சாட்சியாக பகிர்ந்துகொள்ள விரும்பினால், testimony@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 9791934442 என்ற வாட்ஸ் அப் எண்ணுக்கு அனுப்பலாம்.

இந்த QR Codel பயன்படுத்தியும் ஜெபக் குறிப்புகளை அனுப்பலாம்.

# இன்றைய இறை தியானம்

## ஜனவரி 2022



**1**
**யோபு 22:28 - பாதையில் வெளிச்சம்**
**தியானத்திற்கு:** யாத். 13:21,22; நெகே. 9:12,19; சங். 119:105; ஏசாயா 42:16

**2**
**எண்ணாகமம் 6:24 - கர்த்தர் உங்களைக் காக்கிறவர்**
**தியானத்திற்கு:** யாத். 23:20; 1 சாமு. 2:9; சங். 91:11; 121:7; நீதி. 3:26

**3**
**பிலிப்பியர் 4:13 - நம்மை பெலப்படுத்துகிற கிறிஸ்து**
**தியானத்திற்கு:** யாத். 15:2; சங்கீதம் 18:1; ஏசாயா 49:5; 2 தீமோத்தேயு 4:17

**4**
**சங்கீதம் 23:3 - ஆத்துமாவை தேற்றுகிற தேவன்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 86:17; 94:19; ஏசாயா 12:1; எரேமியா 31:13; 2 தெச. 2:16,17

**5**
**நீதிமொழிகள் 20:22 - கர்த்தருக்கு காத்திருங்கள்**
**தியானத்திற்கு:** சங். 33:20; 37:34; ஏசாயா 40:31; புலம்பல் 3:25,26

**6**
**உபாகமம் 15:18 - எல்லாவற்றிலும் ஆசீர்வாதம்**
**தியானத்திற்கு:** ஆதி. 22:15-18; சங்கீதம் 29:11; கலா. 3:8,9; எபி. 6:13,14

**7**
**சங்கீதம் 134:3 - கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்**
**தியானத்திற்கு:** யாத். 20:24; உபா. 7:13; சங்கீதம் 67:6,7; அப். 3:25,26

**8**
**ஆதியாகமம் 21:22 - தேவன் உங்களோடு இருக்கிறார்**
**தியானத்திற்கு:** ஆதி. 26:3; யோசுவா 1:5; நியா. 6:12,16; ஏசாயா 43:2,5

**9**
**மத்தேயு 19:26 - தேவனால் எல்லாம் கூடும்**
**தியானத்திற்கு:** யோபு 42:2; சங்கீதம் 33:9; எரேமியா 32:17,27; லூக்கா 1:37

**10**
**ஏசாயா 60:15 - நித்திய மகிழ்ச்சி**
**தியானத்திற்கு:** சங்கீதம் 119:111; ஏசாயா 35:10; 61:7; ஆபகூக் 3:18

**11**
**சங்கீதம் 147:13 - பிள்ளைகளை ஆசீர்வதிக்கும் கர்த்தர்**
**தியானத்திற்கு:** ஆதி. 22:17; சங்கீதம் 115:12-14; 128:6; ஏசாயா 54:13

**12**
**யாத்திராகமம் 19:5 - நீங்கள் தேவனுக்கு சொந்த சம்பத்து**
**தியானத்திற்கு:** சங்கீதம் 135:4; தீத்து 2:14; 1 பேதுரு 2:9

**13**
**ஏசாயா 60:1 - கர்த்தருடைய மகிமை**
**தியானத்திற்கு:** லேவி. 9:6,23; எண். 20:6; 2 நாளா. 7:3; லூக்கா 2:4-9

**14**
**சங்கீதம் 23:6 - நன்மையும் கிருபையும் உங்களை தொடரும்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 2:6; சங்கீதம் 84:11; நெகேமியா 5:19

**15**
**யோவான் 14:14 - கர்த்தருடைய நாமத்தில் கேளுங்கள்**
**தியானத்திற்கு:** மத்தேயு 7:7,8; யோவான் 14:13; 16:23,24; லூக்கா 11:10

**16**
**சங்கீதம் 91:15 - மறுஉத்தரவு அருளும் தேவன்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 50:15; ஏசாயா 30:19; 65:24; எரே. 33:3

**17**
**ஏசாயா 32:17 - நீதியின் பலன்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 26:23; சங்கீதம் 18:24; 37:6

**18**
**சங்கீதம் 89:17 - கர்த்தருடைய தயவினால் உயர்வு**
**தியானத்திற்கு:** ஆதி. 32:10; 39:4,21; உபா. 33:23; அப். 27:24

**19**
**ஏசாயா 44:21 - நீங்கள் தேவனால் மறக்கப்படுவதில்லை**
**தியானத்திற்கு:** சங்கீதம் 9:18; ஏசாயா 49:15; ஆமோஸ் 8:7; எபி. 6:10

**20**
**சங்கீதம் 34:10 - கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கு நன்மை**
**தியானத்திற்கு:** 2 நாளா. 19:3; எஸ்றா 8:22; சங்கீதம் 102:13; 122:9

**21**
**ஏசாயா 35:10 - சந்தோஷமும், மகிழ்ச்சியும்**
**தியானத்திற்கு:** நெகே. 12:43; ஏசாயா 51:3,11; எரே. 15:16; லூக்கா 1:14

**22**
**மீகா 2:13 - தடைகளை நீக்குகிற கர்த்தர்**
**தியானத்திற்கு:** யோபு 42:2; ஏசாயா 45:2; மாற்கு 10:13-16; லூக்கா 3:4-6

**23**
**சங்கீதம் 9:9 - கர்த்தர் என் அடைக்கலம்**
**தியானத்திற்கு:** உபா. 33:27; 2 சாமு. 22:3; சங்கீதம் 46:1; நீதி. 29:25

**24**
**ஏசாயா 41:10 - கர்த்தர் உங்கள் சகாயர்**
**தியானத்திற்கு:** ஆதி. 15:1; யாத். 14:13; உபா. 33:29; எரே. 15:11; எபி. 13:6

**25**
**அப்போஸ்தலர் 2:28 - கர்த்தருடைய சந்நிதானத்தில் சந்தோஷம்**
**தியானத்திற்கு:** உபா. 12:7,12,18; 1 சாமு. 11:15; 1 தெச. 2:19,20

**26**
**யோவேல் 2:21 - கர்த்தர் பெரிய காரியங்களை செய்வார்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 7:23,24; யோபு 9:10; சங்கீதம் 126:2,3

**27**
**நாகூம் 1:7 - கர்த்தர் நல்லவர்**
**தியானத்திற்கு:** 2 நாளா. 5:13; சங்கீதம் 34:8; எரே. 33:11; புல. 3:25

**28**
**சங்கீதம் 92:15 - நீங்கள் புஷ்டியும் பசுமையுமாயிருப்பீர்கள்**
**தியானத்திற்கு:** 1 நாளா. 4:40; சங்கீதம் 66:12; அப். 14:17

**29**
**வெளிப்படுத்தல் 21:5 - சகலத்தையும் புதிதாக்குகிற தேவன்**
**தியானத்திற்கு:** சங். 104:30; ஏசாயா 43:19; 2 கொரி. 4:17; 2 பேதுரு 3:13

**30**
**ரோமர் 8:32 - சகலத்தையும் அருளுகிற தேவன்**
**தியானத்திற்கு:** மத்தேயு 7:11; யோவான் 3:16; அப். 17:25

**31**
**யாத்திராகமம் 14:14 - கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்**
**தியானத்திற்கு:** யாத். 14:13; உபா. 1:29,30; 3:22; யோசுவா 23:3




**இந்த இன்றைய ஆசீர்வாதத்திற்காக...**

ஃபேஸ்புக்: *Jesus Calls page* யூடியூப்: *JesusCalls* சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்

இணையதளம் : *www.jesuscalls.org* ஃபேமிலி சேனல் மொபைல் செயலி

ஃபேமிலி சேனல்: இணையதளத்தில் *www.familychannel.org*

கேபிள் இணைப்புகள் மூலம்

Dr.பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்

குடும்ப
பகுதி

# தேவ தயவு



***"கர்த்தர் உங்கள் இருதயங்களை தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக"***

*(2 தெசலோனிக்கேயர் 3:5)*

அன்பு சகோதரரே / சகோதரியே, உங்களை அன்போடு வாழ்த்துகிறேன். மற்றொரு புதிய ஆண்டை நாம் காணும்படி ஆண்டவர் கிருபை செய்திருக்கிறார். அவர் உங்களுக்கென்று ஒரு விசேஷித்த வசனத்தை வைத்திருக்கிறார். அவருடைய வசனம் இந்த மாதத்தில் மட்டுமல்ல, உங்களுக்கு முன்பாக இருக்கிற ஆண்டுகள் முழுவதும் சத்தியமானதாகும்.

ஒவ்வொருவருக்கும் குடும்பமும் வீடும் மிகவும் மகிழ்ச்சியான இடமாகும். நாள் முழுவதும் அலுவலகத்தில் பணியாற்றிவிட்டு, குடும்பத்தோடு இளைப்பாற வீட்டிற்கு விரைந்து செல்கிறோம். குடும்பத்தினரோடு செலவிடும் ஒவ்வொரு வினாடியும் விலையேறப்பெற்றதாகும். பரிசுத்த ஆவியின் கனியில் ஒன்றின் மூலம் இந்த பந்தம் வலுவடையும்படி தேவன் தமது வார்த்தையினால் பேசுகிறார். நிபந்தனையற்ற, சுயநலமற்ற அன்பின் அடையாளமாகிய பொறுமையே அந்தக் கனி. எல்லா உறவுகளுக்கும், குறிப்பாக குடும்ப உறவுகளுக்குள் பொறுமை மிகவும் அவசியம். குடும்பத்தினரோடு பொறுமை காப்பது மிகவும் கடினமானது. ஆனால், அதற்குப் பலனுண்டு. குடும்பம் அன்பால் கட்டிக்காக்கப் படுவதற்கு மிகவும் அவசியமான குணநலன் பொறுமையாகும்.

இம்மாத தியானத்திற்கான வேத வசனத்தில் தாவீது, ''***கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?***'' (சங்கீதம் 27:1) என்று கூறுகிறான்.

ஆம், சகோதரரே / சகோதரியே, ஆண்டவரே உங்கள் பெலனாக இருக்கிறார். தாவீது ஒரு ஜெப வீரன். சங்கீதப் புஸ்தகம் முழுவதிலும் அவனது ஜெபங்களைக் காணலாம். அவன் பதில் பெறும்படி தேவனோடு போராடினான். ஆகவேதான் அவன்,



''**கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக்கேட்டார்.**'' (சங்கீதம் 40:1)என்று கூறுகிறான்.

சகோதரரே / சகோதரியே, நீங்கள் பொறுமையோடு உங்கள் குடும்பத்தை வழிநடத்துவதையும்,

## பொறுமை குடும்பத்தை அன்பினால் கட்டி காக்கிறது

- சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன்
*evangeline@jesuscalls.org*

## ஆண்டவர் உங்கள் இருதயத்தை வாஞ்சைகளை அருளிச்செய்வார்

அன்பு சகோதரரே / சகோதரியே, ஆண்டவர் இதைத்தான் உங்களுக்கும் கூறுகிறார். அவர், "நானே உனக்குக் கேடகமும் மகா பெரிய பெலனுமாயிருக்கிறேன்" என்று கூறுகிறார். இதைவிட வேறு என்ன உங்களுக்குத் தேவை? ஆம், அவரே நீங்கள் இந்த உலகில் பெறத்தக்க பெரிய ஆறுதலும், மகா பெரிய பலனுமாயிருக்கிறார். இந்தப் புத்தாண்டில் உங்கள் வாழ்க்கையிலும், குடும்பத்திலும் ஆண்டவரின் பல புதிய ஆசீர்வாதங்கள் அருளப்படும். உங்கள் ஜெபங்களுக்குப் பதில் அளிப்பதாக ஆண்டவர் வாக்குக்கொடுக்கிறார். அவரால் கூடாத காரியம் எதுவுமில்லை. அவர் உங்கள் இருதயத்தை பெலப்படுத்தி, அதன் விருப்பங்கள் எல்லாவற்றையும் அருளிச்செய்வார். ஆண்டவரை உங்கள் நம்பிக்கையாக கொண்டிருங்கள். உங்களுக்கென்று ஆண்டவர் வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை நீங்கள் அனுபவிக்கும்படி அவர் அருளுவார். ஆகவே, தைரியமாயிருங்கள்! உங்கள் பொறுமையினால் தேவன் தயவு காண்பிக்கிறார். ஆண்டவர்தாமே உங்கள் இருதயத்தை பெலப்படுத்தி, உங்கள் இருதயத்தின் எல்லா விருப்பங்களையும் அருளிச்செய்வார்.

ஆசீர்வாதத்திற்காக காத்திருப்பதையும் ஆண்டவர் பார்க்கிறார். உங்களுடைய பொறுமைக்கு ஆண்டவர் வைத்துள்ள பலனை,

> **"கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு"** (சங்கீதம் 27:14)

என்று வேதத்தில் வாசிக்கிறோம். இதைத்தான் நாம் தாவீதின் ஜெப வாழ்க்கையில் காண்கிறோம். "அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன்" (சங்கீதம் 55:17) என்றும், "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்" (சங்கீதம் 34:1) என்றும் அவன் கூறுகிறான்.

இதற்கு ஆபிரகாமின் வாழ்க்கை இன்னொரு நல்ல உதாரணமாகும்.

> **"கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார். அதற்கு ஆபிராம்: கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி: ...அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்."** (ஆதியாகமம் 15:1-5)

கர்த்தர் கூறிய ஆச்சரியமான வார்த்தைகளைப் பாருங்கள்! "எனக்கோ பிள்ளையில்லை" என்று ஆபிராம் கூறியபோது, கர்த்தர், "வானத்தின் நட்சத்திரங்களைப் போல் உனக்கு பிள்ளைகள் இருப்பார்கள்" என்று கூறுகிறார். அவர் வாக்குப்பண்ணியபடியே, ஆபிரகாமின் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் ஆசீர்வதித்தார். கர்த்தர் மேல் அவன் கொண்ட விசுவாசத்தினால், ஆபிரகாம், "விசுவாசத்தின் தந்தை" என்று இன்றும் அழைக்கப்படுகிறான்.

**வாழ்க்கை, கணிக்க இயலாதது. ஏதேதோ நடப்பது போல் நீங்கள் உணரலாம். ஆனால் மனந்தளர்ந்து விடாதீர்கள். தேவனை பற்றிக்கொண்டு அவரது அன்பில் நிலைத்திருங்கள். அவர் உங்களை சரியான பாதையில் நடத்தட்டும்.**

**ஜெபம்:** **என் அன்பு பரம தகப்பனே, இந்த உம்முடைய வாக்குத்தத்தத்திற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். என் முழு இருதயத்தோடும் உம்மேல் நம்பிக்கை வைக்கவும், உம்மிடமிருந்து பதில் வரும்வரைக்கும் பொறுமையாக நான் காத்திருக்கவும் எனக்கு உதவும். இந்த புதிய ஆண்டு முழுவதும் நீர் என்னோடு இருப்பீர் என்ற உறுதியை பரிசுத்த ஆவியின் சந்தோஷம் எனக்கு தரட்டும். தகப்பனே, நீர் எனக்காக வைத்திருக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள எனக்கு உதவும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.**

Scan QR code to watch this message

### பாராட்டுகள்

**"சைகை பாடல் போட்டி"**

வெற்றி பெற்றவர்கள் பட்டியல், நவம்பர் 2021 (பக்கம் 13)

**முதல் பரிசு – பெர்னிஸ் ஜூனியா, யூனிஸ் அபிஷேகியா, சென்னை. இரண்டாம் பரிசு – ஜெனிதா ரூத், சென்னை. மூன்றாம் பரிசு – K. அற்புத அனுகிரஹா, கோயம்புத்தூர்.**

# புத்தாண்டு ஆசீர்வாதத்திற்கான ஜெபம் 2022

## நிலைவரப்படுதலின் ஆண்டு



என் அன்பு ஆண்டவர் இயேசுவே,

இந்தப் புத்தாண்டை காணும்படி கிருபை செய்த உம்முடைய பெரிதான அன்பிற்காகவும், மனதுருக்கத்திற்காகவும் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். உமது திட்டங்கள் என் வாழ்வில் பூரணப்படும்படி இந்த ஆண்டை உம்முடைய அன்பு கரங்களில் அர்ப்பணிக்கிறேன். ஆண்டவரே, வேதம் கூறுகிறபடி, உம்முடைய நன்மைகளினாலும், நிரம்பி வழியும் ஆசீர்வாதங்களினாலும் இந்த வருஷத்தை முடிசூட்டுவீராக.

ஆண்டவரே, உம்முடைய செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் உண்டு. ஆகவே, உமது சிறகுகளால் என்னை மூடுவீராக. என்னை நல்லாரோக்கியத்துடன் காத்து, உம்முடைய பரிபூரண சமாதானத்தையும், பாதுகாப்பையும் அனுபவிக்கும்படி அருள்புரிவீராக. தகப்பனே, உம்முடைய பாதுகாப்பையே நான் நாடுகிறேன். எல்லா வியாதிக்கும் என்னை விலக்கிப் பாதுகாத்து, பாழாக்கும் கொள்ளை நோய்க்கு தப்புவிப்பீராக. நீர் எனக்குக் கேடகமாகவும், கோட்டையாகவும் விளங்குவீராக. உம்முடைய தயை என்னைச் சூழ கேடகமாக விளங்கி என்னை பாதுகாப்பதாக. தகப்பனே, பரலோகத்திலிருந்து வரும் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினாலும் என்னை ஆசீர்வதியும். நான் கையிட்டுச் செய்யும் வேலையை ஆசீர்வதித்து, வர்த்திக்கப்பண்ணும். உம்முடைய மகிமையில் என் குறைவுகளையெல்லாம் நிறைவாக்கவேண்டுமென்று ஜெபிக்கிறேன்.

உம்மை சேவித்து, உமக்கு ஊழியம் செய்யும் கிருபையை எனக்கும் என் வீட்டாருக்கும் அருளிச்செய்யும். ஒவ்வொரு நாளையும் நான் உம்முடைய பிரசன்னத்தில் ஆரம்பித்து, ஸ்தோத்திரத்தோடு முடிக்கும் கிருபையையும் எனக்குத் தாரும். காலைதோறும் உம்முடைய புதிய கிருபைகளைப் பெற்றுக் கொள்ள எனக்கு உதவி செய்யும். உம்முடைய வருகைக்காக நான் ஆவலோடு காத்திருப்பதால், நித்தியத்தில் உம்மோடு வாழும்படி, நான் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமாகும்படி எனக்கு உதவும். இந்தப் புதிய ஆண்டிற்காக மீண்டும் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். உம்முடைய கிருபையாலும், ஆசீர்வாதங் களாலும் இந்த வருஷத்தை முடிசூட்டும், ஆமென்.

**இந்த ஜெபத்திற்கு ஆதாரமாக பயன்படுத்தப்பட்டுள்ள வேத வசனங்கள்: உபாகமம் 7:15; 28:12; யோசுவா 24:15; சங்கீதம் 5:12; 34:1; 65:11; 91:3; 128:2; நீதிமொழிகள் 16:3; எரேமியா 33:6; புலம்பல் 3:22-23; மல்கியா 4:2; எபேசியர் 1:3; பிலிப்பியர் 4:19; 2 பேதுரு 3:12; வெளிப்படுத்தல் 22:11.**



## தொலைபேசி மற்றும் செயலி மூலம் சேவை

### பதிவு செய்யப்பட்ட குரல் பிரார்த்தனை

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரார்த்தனை

**தொலைபேசி அழைப்பு போதும்; உங்கள் நம்பிக்கை பெலப்படும்**

**பதிவு செய்யப்பட்ட குரல் பிரார்த்தனை உதவி**

**தொலைபேசி: +91 44 61 999 000**

**செயலி:** ஆண்ட்ராய்டு தளத்தில் இயங்கும் உங்கள் மொபைல் போனில் 'இயேசு அழைக்கிறார்' மொபைல் செயலியை (App) பதிவிறக்கம் செய்யலாம். 'இயேசு அழைக்கிறார்' மொபைல் செயலியில் காணப்படும் Dial-A-Prayer அறிவிப்பை பயன்படுத்தி உங்கள் போன் மூலமாகவே பதிவு செய்யப்பட்ட குரல் பிரார்த்தனைக்கான எண்ணை தொடர்புகொண்டு ஆசீர்வாதம் பெறலாம்.

**கூகுள் பிளே ஸ்டோர்:** Jesus Calls என்று டைப் செய்து, செயலியை உங்கள் மொபைல் போனில் பதிவிறக்கம் செய்யலாம்.

**யூ-டியூப்:** ஆங்கிலத்தில் ஜெபிக்க: http://bit.ly/DapEnglish
தமிழில் ஜெபிக்க: https://www.youtube.com/playlist?list=PLh7NDrqWnLeAVgxO0JIw3ksKKj2KzKtBp

**இயேசு அழைக்கிறார் இணையதளம்:**
ஆங்கிலத்தில் ஜெபிக்க: https://prayertoweronline.org/dial-a-prayer
தமிழில் ஜெபிக்க: https://prayertoweronline.org/ta/dial-a-prayer

QR CODEஐ ஸ்கேன் செய்தும் இந்த ஜெப உதவியைப் பெறலாம்.

WEBSITE

JC APP



# தேசிய ஜெப கோபுரம்
## புது டெல்லி

**இந்தியா ஆசீர்வதிக்கப்பட
24 மணி நேரமும் பிரார்த்தனை**



**தேவனுடைய திட்டத்திற்காகவும்
தேசத்திற்காகவும்
தீர்க்கதரிசன ஜெபங்கள்**

அன்பு சகோதரரே / சகோதரியே, தேசத்திற்காக ஜெபிக்கும் பாரம் உங்களுக்கு இருக்குமென்றால், தேசிய ஜெப கோபுரத்திற்கு சென்று ஜெபிக்க தன்னார்வ ஜெப வீரராக உங்களை பதிவு செய்துகொள்ளுங்கள். தேசிய ஜெப கோபுரத்தில் ஜெபித்து தேவனுடைய அழைப்பை நிறைவேற்றும்படியாக தேவையான பயிற்சி உங்களுக்கு அளிக்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு: சகோ. அன்பழகன்,
இயேசு அழைக்கிறார் தேசிய ஜெப கோபுரம், 5வது தளம், **CNI** பவன்,
16, பண்டிட் பண்ட் மார்க், புதுடெல்லி - 110 001. தொலைபேசி: 011-44600600
மொபைல்: 8826340077 மின்னஞ்சல்: **nps@jesuscalls.org**



# பிரார்த்தனை கலாசாலை மற்றும் ஜெப பயிற்சி ஊழியம்

JESUS CALLS PRAYER ACADEMY

தரிசனம்: தாங்குகிற பங்காளர்
ஜெபிக்கிற பங்காளராதல்

## பங்காளர்கள் பயிற்சி

காலம்: 6 வாரங்கள் மட்டும்
பயிற்சி முறை: நேரடி வகுப்புகள்
(காலை மற்றும் மாலை அணிகள்)
இடம்: இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள் அனைத்திலும்
மொழி: பல்வேறு மொழிகளில்
பயிற்சி கட்டணம்: கட்டணமில்லை
வாய்ப்பு: ஜெப கோபுரங்கள் மற்றும் தொலைபேசி ஜெப கோபுரத்தில் தன்னார்வ ஜெப வீரராக / ஜெப வீராங்கனையாக ஊழியம் செய்யலாம்.

தேவ பணியில் பங்கு பெறுங்கள்
மேலும் விவரங்களை
**9789977807 / 6380752257**
என்ற எண்களை தொடர்புகொண்டு
அல்லது உங்கள் பகுதியில் அமைந்துள்ள
ஜெப கோபுரத்தை அணுகி தெரிந்துகொள்ளலாம்.

**இணையவழி படிப்பு**
10 வார கால படிப்பு

# இயேசுவை அறிந்துகொள்ளுதல்

காலம்: 10 வாரங்கள் பயிற்சி முறை: ஆன்லைன் (இணையவழி)
கட்டணம்: குறைந்த அளவு
சிறப்பம்சம்: **Dr.** பால் தினகரன் வழங்கியுள்ள ஆழமான போதனைகள் மற்றும் வெளிப்பாடுகள் கொண்ட 10 வீடியோ வடிவ பாடங்கள்
பதிவுக்கு: *https://academy.prayertoweronline.org*

## இட மாற்றம் செய்யப்பட்டுள்ள ஜெப கோபுரங்களின் புதிய முகவரிகள்

**சென்னை - அண்ணா நகர் ஜெப கோபுரம்**
X-41, முதல் தளம்,
இரண்டாவது அவென்யூ,
**KHM** மருத்துவமனை எதிரில்,
ஆவின் பாலகம் அருகில்,
அண்ணா நகர், சென்னை 600 040
**99404 64555 / 9840 9004 71 / 69**

**நவி மும்பை**
Jesus Calls Prayer Tower
Neelkanth Pride CHS Ltd.,
Ground Floor, Shop No. 29,
Plot No.35 & 36, Sector 42A,
Seawoods, Navi Mumbai- 400706
Mob: 6380752220

**பால்தானா**
31/1, Kalgidhar Enclave,
Baltana
Zirakpur -
Punjab - 140603
Mob: 6380752251

**ஜெப கோபுரங்களில் நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.**



புத்தாண்டு
ஆசீர்வாத செய்தி!

# கரம்பிடித்து வழிநடத்தும் தேவன்

- சகோதரி **ஸ்டெல்லா தினகரன்**

தேவனுடைய கிருபையால், 2022-ம் ஆண்டிற்குள் நாம் யாவரும் பிரவேசித்திருக்கிறோம். ஆகவே, உங்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் புது வருட வாழ்த்துதலை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த புது வருடத்தில் கர்த்தர் நம்மோடு கூடவே இருக்க வேண்டும் என்றும், அவர் நம்மை ஆசீர்வாத மாக வழிநடத்த வேண்டும் என்றும் நாம் யாவருமே விரும்புகிறோம். அத்தகைய விதத்தில் நம் வாழ்க்கை யில் ஆண்டவருடைய வழிநடத்துதலும், ஆசீர்வாதமும் இருக்கும்படியாக கர்த்தர் எந்தெந்த விதங்களில் நமக்கு கிருபை அருளுவார்? எப்படி நாம் ஆசீர்வாதங்களை யெல்லாம் பெற்றுக்கொள்வது? என்பதையெல்லாம் தியானிப்போம்.

இன்று நாம் வேதத்திலிருந்து ஆராய்ந்து பார்க்கப் போகிற காரியத்தை, சங்கீதம் 96:4-ல் வாசிக்கிறோம்.

**"கர்த்தர் பெரியவரும், மிகவும் ஸ்தோத்திரிக்கப்படத் தக்கவருமாயிருக்கிறார். எல்லா தேவர்களிலும் பயப்படத் தக்கவர் அவரே!"**

இந்த வேத வசனத்தில், நம்மை ஆசீர்வதிக்க வல்லவ ராயிருக்கிற தேவாதி தேவனின் மேன்மையையும், மகிமையையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ஆம்! கொலோசெயர் 1:9,10-ல் நாம் வாசிப்பதுபோல், "எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவர் சித்தத்தை அறிந்து, சகலவித நற்கிரியைகள் நிறைந்த "கனி தரும் வாழ்வை" நாம் வாழ்ந்து, கர்த்தருக்கு பிரியமான பாத்திரமாய் விளங்கும்படியாக நாம் நம்மை அர்ப்பணித்து, இந்த ஆண்டும், அதைத் தொடர்ந்து வருகிற காலங்களிலும் நிறைவான ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்வோமாக.

## தேவனாகிய கர்த்தர் மிகவும் பெரியவர்

**"என் தேவனாகிய கர்த்தாவே! நீர் மிகவும் பெரியவரா யிருக்கிறீர்." (சங்கீதம் 104:1)**

**"நம்முடைய ஆண்டவர் பெரியவரும், மகா பெலமுள்ளவ ருமாயிருக்கிறார்." (சங்கீதம் 147:5)**

**"இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவரா யிருக்கிறார்." (ஏசாயா 12:6)**

ஆண்டவராகிய இயேசுவின் தாயார் மரியாளிடம், தேவ குமாரனைப் பற்றி தேவதூதன் கூறுகையில், "அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்" என்று கூறியிருப்பதை நாம் வேதத்தில் வாசிக்கிறோம் (லூக்கா 1:32). ஆம் பிரியமான வர்களே! நம் ஆண்டவர் "பெரியவராயிருக்கிறார்." அவர் நம்மை ஆசீர்வதிக்க வல்லவராக இருக்கிறார்! "உமது இரட்சிப்பினால் அவர் மகிமை பெரிதாயிருக் கிறது" என்றும் வேதம் கூறுகிறது (சங்கீதம் 21:5). இத்தகைய மகிமையான இரட்சிப்பை, இரட்சகராகிய இயேசு கிறிஸ்து எவ்வாறு நமக்கு அருளினார்?

தேவன் பெரியவராயிருந்து, இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அற்புதமாய் மீட்டு இரட்சித்ததைக் குறித்து, மோசேயும், இஸ்ரவேல் ஜனங் களும் "கர்த்தரே என் இரட்சிப்பும், தேவனுமாயிருக் கிறார்" என்று புகழ்ந்து பாடினார்கள் (யாத்திராகமம் 15:2). தாவீது, தனது சத்துருக்கள் எல்லாருடைய கைக்கும், கர்த்தர் தன்னை நீங்கலாக்கி விடுவித்து இரட்சித்த பொழுது, "என் இரட்சிப்பின் கன்மலையாகிய தேவன் ஸ்தோத்திரிக்கப்படுவாராக" என்று கூறி அவரை வாழ்த்தினான் (2 சாமுவேல் 22:47; சங்கீதம் 18:46). இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரை பார்க்கும்படியாக ஆவலோடு காத்திருந்த சகேயுவை, அவர் அன்போடு பெயர் சொல்லி அழைத்து, அவனோடு அவன் வீட்டிற்கு சென்று, "இந்த வீட்டிற்கு இன்றைக்கு இரட்சிப்பு வந்தது" என்று கூறி, அவர்களுக்கு புத்துயிர், புதிய சந்தோஷம் யாவையும் கொடுத்த ஆண்டவராகிய இயேசு எவ்வளவு பெரியவராயிருக்கிறார் (லூக்கா 19:9).

இந்த புதிய ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கிற நம் ஒவ்வொருவரோடும்கூட அவ்வாறே ஆண்டவர் இயேசு "பெரியவராயிருந்து," நமக்கு ஆசீர்வாதமாக, விசேஷமாக "இரட்சகராக" விளங்குவார் என்பதை விசுவாசித்தவர்களாக, சகேயுவைப்போல் ஆண்டவரை முழுமனதுடனும், முழு இருதயத்துடனும் நம் இல்லங்களுக்கு வரும்படி வாஞ்சையோடு நாமும் அழைப்போம். அப்பொழுது,

**"கர்த்தர் சீயோனைத் தெரிந்துகொண்டு, அது தமக்கு வாசஸ்தலமாகும்படி விரும்பினார். இது என்றென்றைக்கும் நான் தங்கும் இடம்; இதை நான் விரும்பினபடியால், இங்கே வாசம்பண்ணுவேன்." (சங்கீதம் 132:13,14)**

என்ற மேலான பாக்கியம் நிறைந்த தெய்வீக வாழ்வை நாமும் பெற்று மகிழ்வோம்.

## கர்த்தர் மிகவும் ஸ்தோத்திரிக்கப்படத் தக்கவர் (சங்கீதம் 96:4)

**"அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதித்து, ஸ்தோத்திரபலிகளை செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக." (சங்கீதம் 107:21,22)**

**கர்த்தர் உங்கள் வாழ்வில் பெரியவராயிருந்து, உங்களுக்கு அற்புதங்களைச் செய்து, உங்களை மேன்மைப்படுத்துவார்**

"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்" (1 தெசலோனிக்கேயர் 5:18) என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். தேவனுடைய தாசனாகிய தாவீது,

**"கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்." (சங்கீதம் 34:1)**

என்று, தான் கண்ணீர் நிறைந்திருந்த வேளையில் பாடியிருக்கிறான். ஆகவே, "நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகள் எல்லாவற்றினின்றும் அவனை விடுவிப்பார்" (சங்கீதம் 34:19) என்றும் அவரை ஸ்தோத்திரித்துக்கொண்டே கூறியிருக்கிறான். மட்டுமல்ல, சங்கீதம் 31:19,21 ஆகிய வேத வசனங்களில், தாவீது தன்னுடைய அனுபவத்தை ஸ்தோத்திரத்தோடேகூட அறிக்கையிடுகிறான்.

**"உமக்கு பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! கர்த்தர் அரணான நகரத்தில் எனக்கு தமது கிருபையை அதிசயமாய் விளங்கப்பண்ணினபடியால், அவருக்கு ஸ்தோத்திரம்."**

பக்தன் யோபுவின் வாழ்க்கையைப் பாருங்கள். தேவாதி தேவனை உத்தமமாய் பின்பற்றின அவன் வாழ்க்கையில் பலத்த சோதனைகள் வந்த வேளையிலும் அவன் செய்தது என்ன?

**"அவர் என்னை கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்." (யோபு 13:15)**

என்று கூறிய யோபு, தன்னுடைய பத்து பிள்ளைகளையும் ஒரே சமயத்தில் இழக்கக்கொடுத்த அந்த கடினமான சூழ்நிலையிலேயும்கூட, "கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்" (யோபு 1:21) என்று கர்த்தரை ஸ்தோத்திரித்ததினிமித்தம், தேவ கிருபை அவன்மீது இறங்கியது. இதினிமித்தம், அவனுடைய முன்னிலைமையைக் காட்டிலும், பின்னிலைமையை அதிகமாய் ஆசீர்வதித்த தேவன், அழகான பத்து பிள்ளைகளை திரும்பவுமாக அவனுக்கு தந்து, அவனுடைய கண்ணீரை ஆனந்தக் கண்ணீராக மாற்றினார் (யோபு 42:12,13).

பிரியமானவர்களே, இந்த புதிய வருடத்திற்குள் பிரவேசித்திருக்கிற நாமும்கூட எல்லா வேளைகளிலும், எப்படிப்பட்ட நிலைமையிலும் "முழு இருதயத்தோடே கர்த்தரை ஸ்தோத்திரிக்க கற்றுக் கொள்வோம்." "துதிகளின் மத்தியில் வாசம்பண்ணுகிற நம் தேவன்" (சங்கீதம் 22:3), உங்கள் வாழ்க்கையையும் தமது பிரசன்னத்தினால் நிரப்பி, மேன்மையும், மகிமையுமான காரியங்களை நிகழ்த்தி உங்களை ஆசீர்வதிப்பார்.

ஒரு கிறிஸ்தவ ஆசிரமத்தை நடத்தி வந்த தேவ மனிதர் ஒருவர், தாய் தகப்பனற்ற ஆதரவில்லாத பிள்ளைகள் சிலருக்கு இலவசமாக ஆதரவு அளித்து அவர்களை பராமரித்து வந்தார். ஒரு நாள் காலை அந்த பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க முடியாதபடி மிகுந்த பணக் கஷ்டம் சூழ்ந்த நிலை அவருக்கு ஏற்பட்டது. ஆனாலும், அவர் தன்னுடைய பிள்ளைகளுக்கு அதை வெளிப்படுத்தாமல் விசுவாசத்தோடு, "பிள்ளைகளே! இன்றைக்கு கர்த்தர் நமக்கு பெரிய காரியங்களை செய்யப்போகிறார். ஆகவே, நாம் கர்த்தரை முழுமனதுடன் பாடி ஸ்தோத்திரித்து, அவரைத் துதிக்கப் போகிறோம்" என்று கூறி, துதிப் பாடல்களைப் பாடி, பிள்ளைகளையும் பாட வைத்து அவர்களை உற்சாகப்படுத்தினார். அவ்வாறு ஆனந்த சத்தத்தோடே அவர்கள் கர்த்தரைப் பாடித் துதித்துக்கொண்டிருந்த வேளையில் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. திடீரென்று அந்த ஆசிரமத்தின் வாசலில் ஒரு பெரிய வேன் வந்து நின்றது. ஒருசில நிமிட நேரங்களுக்குப்பின், அந்த வேனின் ஓட்டுனர் வேனிலி

ருந்து இறங்கி வந்து, அவர்கள் வாசற்கதவைத் தட்டினார். அவர் அந்த ஆசிரமத் தலைவரிடம் இப்படியாகக் கூறினார். "ஐயா, நாங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பாலும், ரொட்டியும் எடுத்துக் கொண்டு சென்றுகொண்டிருந்தோம்; ஆனால், திடீரென்று வேன் பழுதடைந்து நின்றுவிட்டது. அதை சரிசெய்ய எப்படியும் பல மணி நேரம் ஆகும். ஆனால் அதற்குள் நாங்கள் கொண்டுவந்த பால் முழுவதுமாய் கெட்டுப்போய் விடும். எனவே, என்னுடைய எஜமானர், இவைகளை யெல்லாம் உங்கள் ஆசிரமத்திற்குக் கொடுத்துவிட்டு, வேனை கம்பெனிக்கு சரி செய்யும்படியாக எடுத்து செல்லும்படி கூறியுள்ளார். எனவே, இந்த ரொட்டி, பால் யாவற்றையும் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கூறினான். உடனே அந்த ஆசிரமத் தலைவர், "கர்த்தர் செய்த இந்த பெரிய அற்புதத்திற்காக நான் எவ்வாறு கர்த்தரை ஸ்தோத்திரிப்பேன்" என்று மனதிலே எண்ணின வராய், தன்னுடைய பிள்ளைகளுக்கு அவைகளை யெல்லாம் அருளிச் செய்த கர்த்தரை, துதி ஸ்தோத் திரத்தோடே பாடி மகிமைப்படுத்தினார்.

ஆம் பிரியமானவர்களே, உங்கள் குறைவுகள் மத்தியிலே நீங்களும்கூட கவலைக்கு இடம்கொடாமல், மனதார கர்த்தரை ஸ்தோத் திரித்து பாடி மகிழுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்கள் வாழ்விலும் பெரியவராயிருந்து, உங்கள் ஸ்தோத்திரபலியை அங்கீகரித்து, உங்களுக்கும் அற்புதங்களைச் செய்து, உங்களை மேன்மைப்படுத்துவார்.

சகல நாட்களிலும் கர்த்தரே நம்மோடு கூடவேயிருந்து, எல்லா சூழ்நிலைகளிலேயும் நம்மை பாதுகாத்து அருமையாக வழிநடத்துவார்

## எல்லா தேவர்களிலும் அவரே பயப்படத்தக்கவர்! (சங்கீதம் 96:4)

வேத புத்தகத்தில், சங்கீதம் 118:6; எபிரெயர் 13:6 ஆகிய பகுதிகளில், "கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார். நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்?" என்று நாம் வாசிக்கிறோம். அருமையானவர்களே! இந்தவிதமான "கர்த்தருக்கு பயப்படுகிற பயம்" உங்களில் உண்டா?

**"நீங்கள் வலதுபுறமாய் சாயும்போதும், இடதுபுறமாய் சாயும்போதும் வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்." (ஏசாயா 30:21)**

என்றும்,

**"நான் உனக்கு போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்கு காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்." (சங்கீதம் 32:8)**

என்றும் வேத வசனங்களில் நாம் வாசிக்கிறபடியே, கர்த்தரையே நம்பியிருக்கிற, அவரையே நோக்கிப் பார்க்கிற அவருடைய பிள்ளைகளுக்கு கர்த்தர் அவர்கள் நடக்கவேண்டிய வழியைக் காண்பித்து, அவர்களை கரம்பிடித்து நடத்துவார். இதைத்தான், "எங்கள் தேவனு டைய கரம் எங்கள் மேலிருந்து எங்களை வழிநடத்தி யது" என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம் (எஸ்றா 8:21). தம்மீது முழு நம்பிக்கை வைத்திருந்த தாவீதைக் குறித்து:

**"என் தாசனாகிய தாவீதைக்கண்டு பிடித்தேன்; என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம்பண்ணி னேன். என் கை அவனோடே உறுதியாயிருக்கும்; அவன் புயம் அவனை பலப்படுத்தும்." (சங்கீதம் 89:20,21)**

என்று கர்த்தர் கூறியிருக்கிறார். அப்படியே அவனை முடிவுபரியந்தம் அவர் காத்து வழிநடத்தினார்.

நான் அடிக்கடி கூறுவதுபோல், என் கணவரை நான் இழந்து தவித்த வேளையில், பரிசுத்த ஆவியானவர் என்னோடு பேசி, என்னை கரம்பிடித்து அழகாக வழிநடத்தினார். அவரே எனக்கு "சகலவிதமான ஆறுதலின் தேவனாக" (2 கொரிந்தியர் 1:3,4) இருந்து, என் கவலைகளையெல்லாம் மாற்றி, என்னை ஆற்றித் தேற்றினார். அதுமட்டுமின்றி, மற்றவர்களை நான் ஆற்றித் தேற்றும்படியாக ஆனந்த தைலத்தினால் என்னை அளவில்லாமல் அபிஷேகித்து, விசுவாசமும், தைரியமும் என்னில் பெருகச் செய்து, இன்றுவரை அவரது ஊழியத்தில் ஆசீர்வாதமான பாத்திரமாக மாற்றியிருக்கிறார்.

ஆம் பிரியமானவர்களே! இந்த புது வருடத்தின் ஆரம்பத்திலே தானே, சகல காரியங்களி லேயும் கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் கவனமாக நடப்பதில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருப்போம். அப்பொழுது, அவரும் நம்மைக் கைவிடாமல் கரம்பிடித்து, பாக்கியமான வழிகளில் நடத்துவார்.

**"நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னை பலப்படுத்தி உனக்கு சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்." (ஏசாயா 41:10)**

என்ற மாறாத அவரது வார்த்தையின்படி, அவரே நம்மை ஆற்றித்தேற்றி, சகல நாட்களிலும் நம்மோடு கூடவேயி ருந்து எல்லா சூழ்நிலைகளிலேயும் நம்மை பாதுகாத்து அருமையாக வழிநடத்துவார். நாமும் அவர்மேல் வைத்த நம்பிக்கையில் மாறாதவர்களாக, அவரை உறுதியாகப் பற்றிக்கொண்டு, அவருக்கு பிரியமான வழிகளில் நடப்போம்; நிறைவான பாக்கியத்தை ஒவ்வொரு நாளும் பெற்றுக்கொள்வோம்.

# டிஜிட்டல் மீடியா மூலம் இயேசு அழைக்கிறார் ஊழியம் பூமியின் எல்லையெங்கும் சுவிசேஷத்தைக் கொண்டு செல்கிறது

ஆண்டவருடைய வார்த்தையை ஒருபோதும் தடைசெய்ய முடியாது. பொது முடக்க காலத்திலும் இயேசு அழைக்கிறார் ஊழியம் வெவ்வேறு டிஜிட்டல் ஊடக தளங்கள் மூலமாக மக்களுக்கு ஊழியம் செய்து நம்பிக்கை அளித்தது.

கீழ்க்காணும் தளங்கள் மூலம் இயேசு அழைக்கிறார் ஊழியத்தோடு எப்போதும் இணைந்திருக்கலாம்.

"நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்." (அப்போஸ்தலர் 1:8)



### இயேசு அழைக்கிறார் இணையதளம்:

தேவ செய்திகள், பாடல்கள் மற்றும் ஜெபங்கள் இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் இணையதளத்தில் உள்ளன. இன்றைய இறைவார்த்தையைக் கேட்கலாம். ஜெப விண்ணப்பத்தை அனுப்பும் வசதி உள்ளது. நீங்கள் இருக்குமிடத்திலிருந்தே இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்க முடியும்.

**www.jesuscalls.org**

### போட்காஸ்ட் (Podcast)

Dr. பால் தினகரனின் போட்காஸ்ட் (Podcast) ஒலிபரப்பு மூலம் தினமும் தேவ செய்தியினை மக்கள் பல்வேறு தளங்களில் கேட்டு ஆசீர்வாதம் பெற்று வருகிறார்கள்.




APPLE PODCASTS | Google Podcasts | Spotify | Jio Saavn | amazon music | more →

### சமூக ஊடகம்

சமூக ஊடகங்கள் வாயிலாக பின்னூட்டம், தனிப்பட்ட செய்தி பகிர்வு மற்றும் மின்னஞ்சல் இவற்றின் மூலம் ஆயிரக்கணக்கான ஜெப விண்ணப்பங்கள் வருகின்றன. ஃபேஸ்புக்கில் 'see it first' என்பதை தெரிவு செய்வதன் மூலம் ஊழியத்திலிருந்து பதிவுகளைத் தவறாமல் காணலாம்.

@Jesuscallsministries @JesusCallsTamil @JesusCallsTelugu @JesusCallsHindi

தினசரி ஆசீர்வாத செய்தி மற்றும் வாக்குத்தத்தங்கள் பங்காளர்களுக்கு வாட்ஸ்அப் மூலம் பகிரப்படுகிறது. வாட்ஸ்அப் எண்:+91 90940 99977

தீர்க்கதரிசனங்கள், மாதாந்திர ஆசீர்வாத செய்திகள், முக்கியமான நிகழ்வுகள் பங்காளர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன.

வீடியோக்கள், பாடல்கள், வேதாகம போதனைகள், சாட்சிகள் தினமும் யூடியூப்பில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. லட்சக்கணக்கானோருக்கு ஆசீர்வாதமாக யூடியூப் பதிவுகள் விளங்குகின்றன

யூடியூப் சேனலை

JESUS CALLS
PRAYING FOR THE WORLD

சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்

இயேசு அழைக்கிறார் மொபைல் செயலியை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

DOWNLOAD NOW

GET IT ON Google Play | Download on the App Store

@jesuscallsministries

@JesusCalls

**சமூக ஊடகங்களில் எங்களைப் பின்தொடருங்கள்; ஜீவனை அளிக்கும் தேவ வார்த்தைகளைப் பெற்றிடுங்கள்**




# வாக்குத்தத்தம் அருளியவர் வாக்கு மாறாதவர்

- சகோதரி **ஸ்டெல்லா தினகரன்**

***"...கர்த்தர் உங்கள் முன்னே போவார்; இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார்."*** (ஏசாயா 52:12)

இந்த புது வருடத்திலே கர்த்தர் நமக்கு அருளுகிற அவரது "தெய்வீக வாக்குத்தத்தம்", மேற்கண்ட வசனத்தில் உள்ளது! "வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம் தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது. வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்" என்று வேதாகமத்தில் நாம் வாசிக்கிறோம் (அப்போஸ்தலர் 2:39; எபிரெயர் 10:23). எனவே, இந்த புதிய ஆண்டிலே கர்த்தர் தம் கண்ணின் கருவிழியைப்போல நம்மைக் காத்து வழிநடத்தப் போகிறார் என்று விசுவாசித்து, ஒவ்வொரு நாளும் அவர் பாதத்தை இறுகப் பற்றிக்கொள்வோமாக!

### கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்; நான் தாழ்ச்சி அடையேன் (சங்கீதம் 23:1)

"நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனையே கொடுக்கிறான்" என்றும், "நான் என்னுடைய ஆடுகளை அறிந்தும், என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்" (யோவான் 10:11,15) என்றும், நம்முடைய நல்ல மேய்ப்பனான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்விதமாகக் கூறுகிறார். "ஒரு மேய்ப்பன் தனது நூறு ஆடுகளில் ஒரு ஆடு காணாமற்போனாலும், காணாமற்போன அந்த ஒரு ஆட்டைத் தேடித்திரிந்து கண்டுபிடித்தபின்பு சந்தோஷத்தோடே அதை தன் தோளின்மேல் போட்டுக்கொண்டு வீட்டிற்கு வந்து, அனைவரையும் வரவழைத்து, காணாமற்போன என் ஆட்டைக் கண்டுபிடித்தேன்" என்று சந்தோஷப்படுவான் (லூக்கா 15:4,6).

**"அதுபோல, மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்து சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்கு சொல்லுகிறேன்." (லூக்கா 15:7)**

ஆம்! இவ்வுலகில் மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம், பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறபடியே, நம் மேய்ப்பராயிருக்கிற ஆண்டவராகிய இயேசு, நம் ஒவ்வொருவருக்காகவும் சிலுவையிலே தியாகபலியாக தம்மையே அர்ப்பணித்து, அதன்மூலம் நாம் பாவங்களிலிருந்து முற்றிலுமாக விடுதலை பெற்று, அவருக்கு சொந்தமான பிள்ளைகளாக மாறும்படி செய்திருக்கிறார்.

**"அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மை சுத்திகரிக்கும்படி, நமக்காக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்." (தீத்து 2:14)**

**"இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல." (மத்தேயு 18:14)**

**"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." (1 தீமோத்தேயு 2:4)**

ஆம், இவ்விதமாக, இந்த புதிய ஆண்டு முழுவதும் "நல்ல மேய்ப்பராக" நமக்கு முன்னே போகிறவராயும், நமக்கு பிறகாலேயும் நம்மை பொதிந்து காக்கிறவருமாயுமிருப்பார். ஒவ்வொரு நாளும் இதை உணர்ந்தவர்களாக, அவருக்கு நாம் நன்றி செலுத்துவோம். 1 யோவான் 5:4-ன்படி, நாம் இதை விசுவாசித்து, வாழ்வில் ஜெயம் பெற்று வாழ்வோம். வீணான கவலைகளையும், பாரங்களையும் தூரத் தள்ளிப் போட்டுவிட்டு நம்பிக்கையுடன் பாக்கியமான வாழ்வைப் பெறுவோம்.

### செவ்வையான வழியைக் கொண்டிருக்கிறவன் பாக்கியவான்

**"உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்." (சங்கீதம் 84:5)**

எனும் வேத வசனத்தின்படி, நமக்கு முன்னே செல்கிற நம் தேவனாகிய கர்த்தர், நம்மை சகலவிதத்திலும் பெலப்படுத்தி,

செவ்வையான வழிகளில் அருமையாக வழிநடத்துவார். "எவரையும் பலப்படுத்துவது உமது கரத்தினால் ஆகும்" என்று வேதம் கூறுகிறது (1 நாளாகமம் 29:12). "தேவன் தமது ஜனங்களுக்கு பெலனையும், சத்துவத்தையும் அருளுவார்" (சங்கீதம் 29:11; 68:35) என்று வேதம் கூறுகிறபடி, இந்த புதிய ஆண்டிலே கர்த்தர் நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்திலே காணப்படும் சகல பெலவீனங்களையும் மாற்றி, தமது தெய்வீக பெலத்தினால் இடைகட்டுவார். நம்முடைய பெலவீனத்தினிமித்தம் நாம் அவரை நோக்கி எப்பொழுதெல்லாம் கூப்பிடுகிறோமோ, அப்பொழுதெல்லாம் அவர் நம்மிடம் வந்து, நம் ஆத்துமாவிலே தமது தெய்வீக பெலனை அருளி, நம்மை தைரியப்படுத்துவார் (சங்கீதம் 138:3). அப்பொழுது நாமும் தாவீதைப்போல், "என் பெலனாகிய கர்த்தாவே, உம்மிலே அன்பு கூருவேன்" (சங்கீதம் 18:1) என்று மகிழ்ச்சியுடன் கூற முடியும். வேதத்தில் நாம் வாசிப்பதுபோன்று, "அழுகையின் பள்ளத்தாக்கின் நடுவேயும்" (சங்கீதம் 84:6), "மரண இருளின் பள்ளத்தாக்கின் மத்தியிலேயும்" (சங்கீதம் 23:4) நாம் கடந்து செல்லவேண்டிய பயங்கரமான சூழ்நிலைகள் வந்தாலும், தேவனாகிய கர்த்தர் நம்மைக் கைவிடாமல் நம்மோடு கூடவேயிருப்பார். நம்மை ஆற்றித் தேற்றி அரவணைத்துக்கொள்வார். நம்முடைய துக்கங்களையெல்லாம் முற்றிலுமாய் மாற்றி, நம்மை தம்முடைய தெய்வீக சந்தோஷத்தினால் நிரப்பி, நம்முடைய வாழ்வில் அழுகையின் பள்ளத்தாக்கை நீரூற்றாய் மாற்றுவார்.

வேத புத்தகத்திலே, மார்த்தாள், மரியாள் இவர்களின் வீடானது, தங்களது ஒரே சகோதரனை இழந்து கண்ணீரில் நிறைந்திருந்த வேளையில், அவர்கள் இருவரும் ஆண்டவர் இயேசுவின்மேல் வைத்திருந்த அன்பினிமித்தமும், விசுவாசத்தினிமித்தமும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு பெரிய அதிசயத்தை நிகழ்த்தி, அவர்கள் சகோதரனை உயிரோடு திரும்பவும் எழுந்திருக்கப்பண்ணி, கண்ணீரின் பள்ளத்தாக்கை நீரூற்றாக மாற்றினார். அதுபோல, நீங்களும் அவர்மீது முழு இருதயத்தோடும், முழு உள்ளத்தோடும் அன்பு செலுத்துவீர்களானால், உங்கள் கண்ணீர் யாவையும் அவர் அவ்வாறே மாற்றி, உங்களை பெலப்படுத்தி களிகூர்ந்து மகிழச் செய்வார்.

> **கர்த்தர் இந்த ஆண்டு முழுவதும் "நல்ல மேய்ப்பராக" நமக்கு முன்னே போகிறவராயும், பிறகாலே நம்மை பொதிந்து காக்கிறவருமாயும் இருப்பார்**

### அவரை தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, ஆத்தும இரட்சிப்பை அடைவீர்கள்

**"அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரை தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை அடைகிறீர்கள்." (1 பேதுரு 1:8,9)**

இப்படிப்பட்ட மகிமையினால் நிறைந்த தெய்வீக சந்தோஷத்தை, ஆண்டவராகிய இயேசுவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிறைந்தபொழுது பெற்றுக்கொண்டார்கள் என்பதை அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் நாம் தெளிவாக வாசிக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரித்து உயிரோடெழுந்த பின்பு, தனிமை, கவலை, பயம் போன்ற சூழ்நிலைகளினால் நிறைந்திருந்த தம்முடைய சீஷர்களுக்கு அவர் உயிரோடிருக்கிறவராக தரிசனம் தந்து, அவர்களை தம் பாதத்தில் ஒருமனதுடன் காத்திருக்கும்படியாக செய்து, அதினிமித்தம் இந்த மகிமை நிறைந்த தெய்வீக அனுபவத்தை அவர்கள் பெற்று மகிழ்ந்து களிகூரும்படி செய்தார். அதன்பிறகு, அவரது சீஷர்களுள் பேதுருவின் வாழ்வு எப்படி தேவ மகிமையும், மகத்துவமும் நிறைந்ததாக மாறியது என்று வேதத்தில் வாசிக்கிறோம். மனுஷருக்கு பயப்படும் பயத்தினால், "இயேசுவை நான் அறியேன்" என்று அவரை மறுதலித்தவனாகிய பேதுரு, இந்த தெய்வீக அனுபவத்தைப் பெற்றபின்பு, எவ்வளவு தைரியமும், விசுவாசமும் கொண்டவனாக, கர்த்தருடைய சேவையைப் புரிந்து தேவ நாமத்தை மகிமைப்படுத்தினான்! தன் வாழ்நாள் முடிவுபரியந்தம் எவ்வளவோ பயங்கரமான பாடுகள், உபத்திரவங்கள் வழியே கடந்துசெல்ல வேண்டியது நேரிட்ட வேளையிலும், அவன் எவ்வளவு மகிழ்ச்சியோடும், விசுவாசத்தோடும், தைரியத்தோடும் அவைகளின் நடுவே கடந்துசென்றான் என்றும் நாம் வேதத்தில் வாசிக்கிறோமல்லவா? இதினிமித்தம் கர்த்தர் யூதாஸைத் தவிர அவர்கள் ஒவ்வொருவரைக் குறித்தும் அருமையாக வாக்கருளி சென்றதுபோல், பரலோகில், நித்திய ஜீவனை சுதந்தரிக்கிறவர்களாக இருப்பார்கள் என்றும் (மாற்கு 10:30), மறுஜென்ம காலத்தில் பன்னிரெண்டு கோத்திரங்களையும் நியாயம் தீர்க்கிறவர்களாக பன்னிரெண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பார்கள் என்றும் எழுதியிருப்பது நிறைவேறும் என்றும் வாசிக்கிறோமல்லவா? (மத்தேயு 19:28).

ஆம் பிரியமானவர்களே! இந்த உலக வாழ்வில் கர்த்தர் தமது சித்தத்தின்படி நடக்க நம்மை கரம்பிடித்து வழிநடத்துவார். இயேசு கிறிஸ்து, தமது வாழ்விலும் நமக்கு மாதிரியாக அதை வெற்றியோடு நிறைவேற்றி முடித்து, இன்று பரலோகில் பிதாவின் வலதுபாரிசத்தில் வெற்றி சிறந்தவராக சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். நாமும்கூட அவ்வாறே அவருடைய தெய்வீக வழிகளைப் பின்பற்றி, முற்றுமுடிய உண்மையுள்ளவர்களாக, தேவ சித்தத்தை பயபக்தியுடன் நிறைவேற்றுபவர்களாக வாழ்வோமானால், கர்த்தர் இந்த புதிய வருடத்தில் ஒவ்வொரு நாளும் நமக்கு முன்னே போகிறவராகவும், பிறகாலே நம்மைக் காப்பவராகவும் நம் கரம்பிடித்து அழகாக நம்மை வழிநடத்துவார் (ஏசாயா 52:12). நாமும் வெற்றி சிறந்தவர்களாக, கர்த்தருடைய நாம மகிமைக்கென்று எழும்பிப் பிரகாசிக்கிற தெய்வீக வாழ்வை வாழ தேவனே நம்மையும் கிருபையாக வழிநடத்துவார். அத்தகைய வாழ்வை இவ்வாண்டு முழுவதுமாக பயபக்தியுடனும், பக்திவைராக்கியத்துடனும், எந்த நிலைமையிலும் சோர்வுக்கு இடம்கொடாமல், விசுவாச வீராங்கனைகளாக வாழ தேவன் தாமே நம்மை கரம்பிடித்து வழிநடத்துவாராக!

**என் தேவன் உங்கள் குறைவுகளெல்லா வற்றையும் நிறைவாக்குவார்.**
(பிலிப்பியர் 4:19)



# இந்த மாதத்திற்கான *என்* ஜெபக் குறிப்பும், *வெகுமதியும்*

இந்த மாதம் நீங்கள் எந்த பங்காளர் திட்டத்தில் இணைந்து நன்கொடை அளிக்க முன்வருகிறீர்கள்?

**இந்தப் படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்; ஊழியக் குழுவினர் உங்களை தொடர்புகொள்வார்கள்.**

பெயர்: ............................................................... பங்காளர் எண் (இருந்தால்): ..................................

மின்னஞ்சல்: .......................................................................................................................................

தொடர்பு தொலைபேசி எண்: (1)............................................... (2)..................................................

முகவரி:.................................................................................................................................................

..............................................................................................................................................................

உங்கள் தெரிவைக் குறிப்பிடுங்கள்

☐ **ஜெப வீரர்களுக்கான வெகுமதி (GFPI)**

உங்களுக்கு உதவி செய்பவர்களை கனம்செய்து, பரலோகத்திலிருந்து பலனை பெற்றுக்கொள்ளுங்கள்
ஜெபித்தல் என்னும் மாபெரும் சேவையைச் செய்யும் உத்தமர்களை வாழ்த்துங்கள்
பதில் அருளப்பட்ட உங்கள் ஒவ்வொரு பிரார்த்தனைக்காகவும் விதைத்திடுங்கள்
நன்றியறிதலின் ஆசீர்வாதங்களை அனுபவித்து மகிழுங்கள்

☐ **இயேசு அழைக்கிறார் பங்காளர் திட்டம்**

- ✦ உள்ளமுடைந்தோரை குணப்படுத்துதல்
- ✦ ஒரு ஆத்துமாவும் கெட்டுப்போகக்கூடாது
- ✦ இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்குள் வருகிற ஒவ்வொரு ஆத்துமாவும் 1000 மடங்கு விருத்தியடையும்படி பெலப்படுத்தப்படவேண்டும்.

என்னுடைய ஜெபக்குறிப்புகள்:

...................................................................................................

...................................................................................................

...................................................................................................

இந்தப் படிவத்தை நிரப்பி எங்களுக்கு அனுப்புங்கள்.
Dr. பால் தினகரன் மற்றும் அவரது குடும்பத்தினர் உங்களுக்கு
தனிப்பட்டவிதத்தில் ஊழியம் செய்ய வாஞ்சையாயிருக்கிறார்கள்.




**சிலாக்கியங்கள்:**

- ✦ எல்லா ஜெபக்குறிப்புகளும் Dr. பால் தினகரன் ஜெபிக்கும்படி அனுப்பி வைக்கப்படும்.
- ✦ சங்கிலி ஜெபத்தில் ஜெப வீரர்கள் உங்களுக்காக ஜெபிப்பார்கள்.
- ✦ விசேஷித்த நாட்களில் ஜெப வீரர்கள் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஜெபிப்பார்கள்.
- ✦ மாதாந்திர வாக்குத்தத்த மின்னஞ்சல் கடிதம், நேரடியாக உங்களுக்கு அனுப்பப்படும்.
- ✦ அனுதின வாக்குத்தத்தம் SMS மூலம் அனுப்பப்படும்.
- ✦ இயேசு அழைக்கிறார் பத்திரிகையில் மின்னிதழ் (E magazine) அனுப்பி வைக்கப்படும்.

**இணைவதற்கான வழிகள்**

- ✦ *www.jesuscalls.org* என்ற இணையதளம் மூலம் இணையலாம்.
- ✦ உங்கள் பகுதியிலுள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் படிவத்தைக் கொடுத்து இணையலாம்.
- ✦ படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்ப: ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ்.தினகரன் சாலை, சென்னை 600 028.
- ✦ 90154 55455 என்ற எண்ணுக்கு மிஸ்டுகால் (Missed Call) கொடுக்கலாம்.
- ✦ வாட்ஸ்அப் எண்: 97919 34442

## உலகளாவிய திருமண தகவல் சேவை

# TRUE FRIEND
# திருமண தகவல் சேவை

- ✦ நம்பகத்தன்மை கொண்ட தொழில்முறை சேவை
- ✦ ஏகசிந்தை கொண்ட வாழ்க்கைத் துணையைக் கண்டடைதல்
- ✦ உலகம் முழுவதுமுள்ள சமுதாயத்தினருக்கு நம்பிக்கைக்குரிய சேவை

இச்சேவைக்கு பதிவு செய்ய:

**www.truefriendmatrimony.com**

### துக்கம் சந்தோஷமாக மாறியது

நாங்கள் நெடுங்காலமாக இயேசு அழைக்கிறார் ஊழியத்தோடு இணைந்திருக்கிறோம். என் பிள்ளைகள் இளம் பங்காளர்கள். 2005-ம் ஆண்டு என் கணவர் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். எனினும், இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் மூலம் ஆண்டவர் எங்களை ஆற்றித் தேற்றினார். என்னுடைய மகன் ஜாண் சாலொமோனுக்கு ஏற்ற பெண்ணை நாங்கள் தேடிக்கொண்டிருந்தோம். ஆகவே, 2021 ஏப்ரல் மாதம் அவனைப் பற்றிய விவரங்களை True Friend திருமண தகவல் சேவையில் பதிவு செய்து, ஆண்டவர் அவனுக்கு ஏற்ற பெண்ணை அழைத்து வரவேண்டுமென்று தொடர்ந்து ஜெபித்தோம். ஆண்டவர் எங்கள் ஜெபத்தைக் கேட்டார். ஏற்ற ஒரு குடும்பத்தினர், என் மகனை திருமணம் முடிக்க எங்களை அணுகினர். தேவனுடைய சித்தப்படி, True Friend திருமண தகவல் மையத்தில் பதிவு செய்திருந்த அலீஸ் லிடியாவுக்கும், என் மகனுக்கும் 2021 ஆகஸ்ட் 25-ம் தேதி திருமணம் நடைபெற்றது. தேவன் கிருபையாக எங்களை ஆசீர்வதித்திருக்கிறார். அவருக்கே துதியுண்டாவதாக!

**- ஜான்ஸி ராணி,**
பெங்களூரு.

மேலும் விவரங்களுக்கு:
**True Friend Management Support Service Pvt. Ltd.,**
விகாஸ் மந்த்ரா டவர்ஸ்,
மூன்றாவது மாடி,
பழைய எண் 120,
புதிய எண் 249, ஆர்.கே. மடம் சாலை, மந்தைவெளி,
சென்னை 600 028.
மின்னஞ்சல்:
**info@truefriend.co.in**

**பொறுப்பு துறப்பு:**
**இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் தகவல்களின் உண்மைத்தன்மைக்கு True Friend பொறுப்பேற்காது.**




**உங்கள் வாழ்க்கைத் துணையை இங்கே கண்டடையுங்கள்**

---

**TRUE FRIEND**

**கிறிஸ்தவ புத்தகங்கள், இலக்கிய வெளியீடுகள், வெகுமதிகள் உள்ளிட்ட பரிசு பொருட்களை வாங்க ஏற்ற இடம்**

**இணையவழியில் இப்போது சிறப்பாக இயங்குகிறது**



வாடிக்கையாளர்கள் தங்கள் திருப்திக்கேற்ப, எளிதாக வாங்க உதவுகிறோம். வாடிக்கையாளர் திருப்தியே எங்கள் லட்சியம்

**மேலும் விவரங்களை அறியவும் பிரதிகளை பெறவும் எங்கள் இணையதளத்தை பாருங்கள்**

**www.truefriendshoppe.app**

**நல்ல வாசகங்களைக் கொண்ட புதுரக டி-ஷர்ட்டுகள், பெயர்கள் எழுதிய காஃபி கோப்பைகள், பாட்டில்கள், வசன பலகைகள், விதம்விதமான கைப்பைகள், கீ செயின் உள்ளிட்ட பல்வேறு கிறிஸ்தவ இலக்கிய வெளியீடுகள் மற்றும் வேதாகமங்கள் ஒரே இணையதளம் மூலம் கிடைக்கின்றன.**

மேலும் விவரங்களுக்கு, தொடர்புகொள்க:
**True Friend Management Support Service Pvt. Ltd.,**
விகாஸ் மந்த்ரா டவர்ஸ், மூன்றாவது மாடி,
பழைய எண் 120, புதிய எண் 249, ஆர்.கே. மடம் சாலை,
மந்தைவெளி, சென்னை 600 028.
மின்னஞ்சல்: **info@truefriend.co.in**
*: +91 73387 93939*

## சந்தோஷமான ஷாப்பிங் அனுபவத்திற்கு



வாலிபர் பகுதி

# மேன்மையான வாழ்வு

ஹலோ ஃப்ரண்ட்! உங்களுக்கு என் அன்பின் ஆசீர்வாதமான 2022 புத்தாண்டு வாழ்த்துக்கள்! வாக்கு மாறாதவர் என்று அழைக்கப்படுவதற்கேற்ப கடந்த ஆண்டு முழுவதும் ஆண்டவர் தம்முடைய வாக்குத் தத்தங்களைக் காப்பதில் உண்மையுள்ளவராய் இருந் திருக்கிறார். உங்கள் வாழ்க்கையிலும் பல அற்புதங்களை யும், வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

### நித்தியமான நம்பிக்கை

இந்த மாதத்தில் ஆண்டவர் உங்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். அது என்னவென்று அறிந்துகொள்ள ஆவலாயிருக்கிறீர்களா? இந்த வாக்குத் தத்தம் ஜனவரி மாதத்திற்கு மாத்திரமல்ல, ஆயுள் பரியந்தம் ஏற்றதாய் இருக்கிறது. நம் இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவருடைய வாக்குத்தத்தங்கள் 'ஆம்' என்றும், அவருக்குள் 'ஆமென்' என்றும் இருக்கிறது.

**''நம்முடைய தேவனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின்படியே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும், நீங்கள் அவரிடத்திலும் மகிமைப்படும்பொருட்டாக; நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறோம்.''** (2 தெசலோனிக்கேயர் 1:11,12)

இந்த வேத வசனங்களை நீங்கள் கருத்தாய் வாசித் தால், 'நீங்கள் விசேஷித்தவர்' என்பதையும், உங்கள் வாழ்வில் தேவனு டைய விசேஷித்த அழைப்பு இருக்கிறது என்பதையும் காண முடியும். தேவனுடைய கிருபையும் வல்லமை யும் மட்டுமே இதை செய்து முடிக்கும். உங் கள் விருப்பமும் நற்கிரி யைகளுமே தேவனுடைய அழைப்பிற்கு பாத்திரவானா கும்படி உதவி செய்யும். அடுத்து, உங்கள் வாழ்க்கையின் மூலம் தேவன் உங்களிலும் நீங்கள் அவரிலும் மகிமைப்படுவீர்கள். இப்படி நடக்கவேண்டுமென்றே நான் உங்களுக்காக ஜெபித்திருக்கிறேன்.



**சாமுவேல் தினகரன்** | *samuel@jesuscalls.org*

### தேவனுடைய திட்டம்

தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு, தங்களுடைய அழைப்பை நிறைவேற்றி, அவருடைய பரிசுத்த நாமத் திற்கு மகிமையைக் கொண்டுவந்த உண்மையான ஆதாரங்கள் வேத புத்தகத்தில் உள்ளன. இயேசுவின் முதன்மை சீஷர்களில் ஒருவரான சீமோன் பேதுருவைக் குறித்து பார்க்கலாம். அவன், மீன் பிடிக்கிற சாதாரண மனுஷனாக இருந்தான். ஆனால், ஆரம்பத்திலிருந்தே அவனுடைய வாழ்க்கையில் தேவனுடைய அழைப் பிற்கான ஆதாரம் காணப்பட்டது.

**''இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்துபோகையில், மீன் பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிற போது, அவர்களைக் கண்டு, என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்.''**

(மத்தேயு 4:18,19)

என்று இயேசு பேதுருவை அழைப்பதைக் காணலாம்.

பேதுரு, மீன் பிடிக்கிறவனாக இருந்தாலும், அவன் அப்போஸ்தனாக வேண்டுமென்பதே அவனுடைய வாழ்க்கைக்கான தெய்வீக அழைப்பாக இருந்தது. தன்னுடைய அழைப்பை உலகப்பிரகாரமான விதத்தில் நிறைவேற்றுவதற்கு பேதுரு ஆர்வமும், உற்சாகமும் கொண்டவனாக இருந்தான். இயேசுவைப் பாதுகாப்பதே தன்னுடைய அழைப்பு என்று எண்ணி, அவரைப் பாதுகாப்பதில் வைராக்கியம் காட்டினான். இயேசு பாடுபட்டு மரிக்க இருக்கிறார் என்பதை அறிந்தபொழுது, மலையின்மீது கூடாரத்தைப் போட்டு, இயேசுவை அங்கேயே தங்க வைக்கவேண்டுமென்று விரும் பினான். இயேசுவை சிறைபிடிக்க போர்ச்சேவகர்கள் வந்தபொழுது, பேதுரு வேலைக்காரனின் காதை வெட்டினான். அப்படிப்பட்ட பேதுரு, இயேசுவை மூன்று முறை மறுதலித்தான். வாக்குத்தத்த வசனத்தை

மறுபடியும் பார்ப்போமேயானால்,

"...பலமாய் உங்களிடத்தில் நிறை வேற்றவும்...."

(2 தெசலோனிக்கேயர் 1:11,12)

அவருடைய பலத்தினால், நன்மைக்கான உங்கள் விருப்பங்கள் ஒவ்வொன்றையும் நிறைவேற்றுவார்.

"பலமாய் உங்களிடத்தில்" என்ற வார்த்தையைக் கவனித்துப் பாருங்கள். இது எப்படிப்பட்ட பலம் என்று நினைக்கிறீர்களா? அதுதான் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை. அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் இந்த அனுபவம் விரிவாக கூறப்பட்டுள்ளது.

பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டனர். பேதுரு அபிஷேகிக்கப்பட்ட பிறகு, எழுந்து நின்று இயேசுவைக் குறித்து சாட்சி கொடுத்தான். அது, கேட்டுக்கொண்டிருந்த அனைவருடைய இருதயத்தையும் தொட்டது. அவர்கள் தாங்கள் என்ன செய்யவேண்மென்று அவனிடம் கேட்டார்கள். பேதுரு, "மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று அவர்களிடம் கூறினான். வசனத்தை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றவர்கள், அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம் ஆத்துமாக்கள் சபையில் சேர்க்கப்பட்டனர். இதுவே பரிசுத்த ஆவியானவரின் வல்லமை.

> *பரிசுத்த ஆவியானவர்*
> **உங்களை உங்கள் அழைப்பிற்கு பாத்திரவானாக மாற்றுவார்.**

### செய்து முடிப்பதற்கான மாற்றம்

"சரியாக துவங்கப்பட்ட வேலை பாதி முடிந்தது போன்று" (Well begun is half done) என்று ஆங்கில பழமொழி ஒன்று உள்ளது. ஆகவே, இந்த ஆண்டின் ஆரம்பத்திலேயே பரிசுத்த ஆவியானரால் உங்களை நிரப்பும்படி ஆண்டவரிடம் கேளுங்கள். பேதுருவைப் போன்று நீங்களும் மாற்றமடைவீர்கள். பரிசுத்த ஆவியானவரே உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டத்தை வெளிப்படுத்தி, அதற்குள்ளாக உங்களை வழிநடத்தி, உங்கள் அழைப்பை நிறைவேற்றும்படி உங்களைப் பெலப்படுத்துவார். இயேசுவின் நாமம் உங்களிலும், நீங்கள் அவரிலும் மகிமைப்பட வேண்டுமென்பதே இந்த மாற்றத்தின் நோக்கமாகும்.

பேதுருவால் அற்புதங்களும் அடையாளங்களும் நடப்பிக்கப்பட்டதை அப்போஸ்தலர் 5-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். பேதுரு நடந்துபோகும்பொழுது, அவனுடைய நிழலாகிலும்படும்படி வியாதியஸ்தரை தெருக்களில் கொண்டுவந்து வைத்தார்கள். அவர்கள் சுகம் பெற்றனர். பல அற்புதங்களுள் இதுவும் ஒன்றாகும். பேதுருவின் வாழ்க்கையால் தேவன் எவ்வளவு மகிமைப்பட்டார் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாது. ஆம், உங்கள் அழைப்பிற்கான திறவுகோல் பரிசுத்த ஆவியானவரிடமே உள்ளது.

### மேன்மையான வாழ்வு

ஃப்ரண்ட், ஆண்டவர் உங்களை விசேஷித்த நோக்கத்திற்காக அழைத்திருக்கிறார். அவர் உங்களை அழைத்ததோடு மட்டுமல்ல, உங்களை ஆராய்ந்து பார்த்தால், அதை நிறைவேற்றி முடிப்பதற்கான வரங்களையும் உங்களுக்கு அளித்திருப்பதை காண முடியும். அதை வெளிக்காட்டுவதற்கு பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்வார். உங்கள் வரங்களையும் அழைப்பையும் பரிசுத்த ஆவியானவர் காட்டாவிட்டால், நீங்கள் தேவனுடைய திட்டத்தைவிட்டு விலகி, உங்கள் வாழ்க்கை கண்ணீரில் முடியும். அவர் உங்களை பூரணமாக வழிநடத்துவார். அவரே உங்களை தமது அழைப்பிற்கு பாத்திரவானாக மாற்றட்டும். உங்களுடைய கிரியைகளும் விருப்பங்களும் தேவனுடைய திட்டத்தை உங்கள் வாழ்க்கையில் நிறைவேற்றட்டும். உங்கள் வாழ்க்கை முழுவதும், உங்களில் தேவன் மகிமைப்படட்டும். மேன்மையான வாழ்வை நோக்கி முன்னேறிச் செல்வீர்களாக.

**ஜெபம்: ஆண்டவரே, இந்த ஆண்டிற்கு நீர் கொடுத்துள்ள வாக்குத்தத்தத்திற்காக உம்மைத் துதிக்கிறேன். என்னுடைய அழைப்பை நான் கண்டு, அதற்கு பாத்திரவானாக மாறும்படி என்னை உமது பரிசுத்த ஆவியினால் நிறைத்தருளும். உம்முடைய திட்டங்களை நிறைவேற்றும்படி, உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும்படி என்னை பெலப்படுத்தும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.**

Scan QR code to watch this message




இளம் நெஞ்சங்களே, வார இறுதி நாட்களில் நடைபெறும் UTurn Club கூட்டங்களில் கலந்துகொள்ளுங்கள்.

புதிய நண்பர்களை தெரிந்துகொள்ளவும், வாழ்வில் தேவ வல்லமையைப் பெற்று அனுபவிக்கவும் ஏற்ற இடம் UTurn Club.

உங்கள் பகுதியிலுள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை அணுகி, UTurn Club குறித்த மேலும் விவரங்களை அறிந்துகொள்ளலாம்.

www.uturn.in என்ற இணையதளத்தில், UTurn குறித்த முழு விவரங்களையும் அறிந்துகொள்ளலாம்.

SUBSCRIBE

UTurn யூடியூப் சேனலை சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்

f - uturnjc   - uturnjc   - uturnjc   - uturnjc

உங்களைப் போன்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு ஊழியம் செய்வதற்கு உங்கள் உதவியை ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

Use this QR code to do so.

# சமுதாய மாற்றத்திற்கான முன்னேற்ற சேவைகள்





SEESHA
LET'S GIVE LIFE

இந்தியா முழுவதும் வாழும் நலிவுற்ற மற்றும் விளிம்புநிலை சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு மேம்பாட்டு முயற்சிகள் சீஷா சமுதாய முன்னேற்ற திட்டத்தின் சார்பாக செய்யப்பட்டு வருகின்றன. சமுதாயங்கள் மத்தியில் விரிவான ஆய்வு நடத்தி, வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றவும், தொடர் வளர்ச்சியடைய உதவும் வண்ணமும் சமுதாய முன்னேற்ற திட்டங்கள் வடிவடைக்கப்பட்டுள்ளன.

**சீஷா சமுதாய முன்னேற்ற திட்டத்தின் சார்பாக செய்யப்படும் சில சேவைகள்:**

**கல்வி:** தேவையின் மத்தியிலுள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தரமான கல்வி பெற குழந்தை மேம்பாட்டு மையங்கள், கல்வி உதவித் தொகை, ஸ்கூல் கிட் மற்றும் புத்தாடை வழங்குதல் உள்ளிட்ட கல்வி ஊக்க செயல்பாடுகள் வாயிலாக சீஷா உதவி வருகிறது.

**வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்:** வருமானம் ஈட்டவும், வாழ்வாதாரத்தை உயர்த்தவும் தொழில்நுட்பம், தொழில்சார், வேலைவாய்ப்பு திறன் பயிற்சிகள் அவசியம். ஆட்டோமொபைல், தையல், கணினி, கைவினைப் பொருள்கள் செய்தல், ஆங்கில உரையாடல் மற்றும் தொழில் முனைவோர் பயிற்சிகள் சீஷா மூலம் வழங்கப்படுகின்றன.

**சுகாதாரம்:** சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள், நடமாடும் மருத்துவமனை மூலம் மருத்துவ பரிசோதனை நடத்துதல், ஹெச்ஐவி / எய்ட்ஸ் பாதிப்புள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து இணையுணவு வழங்குதல், மக்களுக்கு அரசு சுகாதார திட்டமான சுத்திகரிப்பு சேவை வழங்குதல் மூலம் சுகாதார சேவை வழங்கப்படுகிறது.

**சுற்றுச்சூழல்:** மரக்கன்றுகள் நடுதல், பிளாஸ்டிக் பயன்படுத்தாமை குறித்த விழிப்புணர்வு உண்டாக்குதல், தூய்மைப்படுத்தும் முகாம்கள் நடத்துதல், நடத்தை மாற்றம் குறித்து குடும்பங்களுக்கு தண்ணீர் பயன்பாடு, சுகாதார நடவடிக்கை ஆலோசனைகள் அளித்தல் மூலம் சுற்றுச்சூழல் பராமரிப்பு முயற்சியை சீஷா செய்து வருகிறது.

**பேரிடர் நிவாரண உதவி மற்றும் இந்தியா முழுவதும் பேரிடரால் பாதிக்கப்பட்டோருக்கு மறுவாழ்வு உதவிகளை சீஷா செய்து வருகிறது.**



**மறைந்திருக்கும் திறமையை காண உதவுதல்**

நான் பட்டப்படிப்பை முடித்து பல ஆண்டுகள் கடந்துவிட்டன. வேலைக்குத் தேவையான திறன் பயிற்சி மற்றும் முன்அனுபவம் இல்லாததால் எனக்கு வேலை கிடைக்கவில்லை. புதிய திறன்களில் பயிற்சி பெற எங்கள் கிராமத்தில் வசதியும் இல்லை. கணினிப் பயிற்சி பெற்றால் வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கும் என நான் கருதியதால், காருண்யா நகரில் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படும் சீஷா பயிற்சியில் இணைந்தேன். அங்கு சிறந்த முறையில் அளிக்கப்படும் பயிற்சியால், கணினி மற்றும் இணைய பயன்பாட்டை புரிந்துகொண்டேன். இப்போது வேலை தேடுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளேன். என் கணவர் செய்யும் சிறுதொழிலில் இணைய பயன்பாட்டில் உதவி வருகிறேன். நம்பிக்கையை எனக்குள் விதைத்து, டிஜிட்டல் திறன்களை வளர்த்து தந்த சீஷாவுக்கு நன்றி.

- **திருமதி R. ஜோதி,**

சீஷா கணினி பயிற்சி பயனாளி, சாடிவயல் மலை கிராமம்.


நலிவுற்றவர்கள் கல்வியில் முன்னேறுவதற்கு புத்தாண்டில் உதவி செய்ய அன்புடன் அழைக்கிறோம்

ஒரு மாணவன் / மாணவியின் கல்விக்கு உதவுதல் - ஒரு மாதத்திற்கு - ரூ.1,000/-

நடமாடும் மருத்துவ சேவை உதவி - ஒரு மாதத்திற்கு - ரூ.7,500/-

ஒரு திறன் பயிற்சி மையத்திற்கு உதவுதல் - ஒரு மாதத்திற்கு - ரூ.10,000/-

SCAN TO DONATE

ALL DONATIONS ARE TAX-EXEMPTED UNDER SECTION 80G

You can contribute through G Pay Paytm pay

044 66660000
9300600600

www.seesha.org
info@seesha.org

SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045




Owned by Jesus Calls; Printer and Publisher - G.L.B.Ernest from 16, Dr.D.G.S. Dhinakaran Road, Chennai - 28. Printed at Thomson Press (India) Limited at A-9, Industrial Complex, Maraimalai Nagar - 603 209, Kancheepuram District, Tamil Nadu. Editor: Mrs.Stella Dhinakaran

# *Dr.* பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் வழங்கும் நிகழ்ச்சிகள் ஃபேமிலி சேனலில் *ஒளிபரப்பாகின்றன*




தினகரன் குடும்பத்தினரோடு தேவனின் அன்பைக் கொண்டாடுங்கள்

Family
CELEBRATING LOVE

24 மணி நேர தமிழ் தொலைக்காட்சி

## இரட்டிப்பான ஆசீர்வாதம்

நான் குடும்ப ஆசீர்வாதத் திட்ட பங்காளர். கொரோனா பாதிப்பினாலும், நெஞ்சுவலியினாலும் அவதிப்பட்டபோது, தொலைபேசி மூலம் ஜெப கோபுரத்திற்கு அடிக்கடி தொடர்புகொண்டு எனக்கு சுகம் கிடைக்கவேண்டுமென ஜெபித்தேன். ஒவ்வொரு முறையும் இயேசு அழைக்கிறார் ஜெப வீரர்கள் எனக்காக பாரத்துடன் ஜெபித்தனர்.

இந்நிலையில், ஜுலை 4-ம் தேதி, பிற்பகல் 12:25 மணிக்கு, ஃபேமிலி சேனல் நிகழ்ச்சியை நான் tune செய்தேன். அந்த நேரத்திலே Dr. பால் தினகரன் ஜெபித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது, "சாந்தி, இயேசு உங்களை எல்லா வியாதிகளிலிருந்தும் விடுவிக்கிறார்; உங்கள் பிள்ளைகளோடும், கணவரோடும் சமாதானத்துடன் வாழ்வீர்கள்" என்று கூறினார். அன்றிலிருந்து நான் பூரண சுகம் பெற்றேன். என் குடும்பத்தில் நான் மட்டுமே இயேசுவை அறிந்திருந்தேன். ஆகையால் என் கணவர் தினமும் காரணமின்றி என்னோடு சண்டை போடுவார். ஆனால், இந்த பிரார்த்தனைக்குப் பிறகு எங்கள் குடும்பத்தில் தெய்வீக சமாதானம் நிலவுகிறது. ஆண்டவர் இயேசு நல்லவர். அவருக்கே சகல மகிமையும் உண்டாவதாக. எனக்காக ஜெபித்த Dr. பால் தினகரனுக்கு நன்றி.

– லிடியா சாந்தி தினேஷ், சென்னை.





ஃபேமிலி சேனல் மொபைல் செயலியை **GOOGLE PLAY** மற்றும் **APP STORE** வழியாக பதிவிறக்கம் செய்து நிகழ்ச்சிகளைக் காணலாம்

GET IT ON Google Play

*http://bit.ly/FCApp-Andriod*

Download on the App Store

*http://bit.ly/Fc-App*

**கேபிள் இணைப்புகளில் காணுங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 175 | SCV | 800 | CTN |
| 750 | TCCL | 977 | EAGLE TV IPTV (CANADA) |
| 595 | JPR (IN MUMBAI) | 977 | PEO SKY IPTV (JAPAN) |
| 725 | VK DIGITAL | | |
| 599 | ARASU CABLE | | |
| 173 | BEE TV IPTV | | |
| 200 | AMN | | |
| 677 | AKSHYA | | |

Roku D9RRK5Z

amazon fireTV

androidtv

இணையத்தில் பார்க்க

www.familychannel.org

FOLLOW US ON : /FAMILY CHANNEL

நிகழ்ச்சிகளைப் பற்றிய கருத்துக்களை பகிர்ந்துகொள்ளவும், ஃபேமிலி சேனலில் விளம்பரம் செய்யவும்

*promotion@truefriend.co.in* +91 95001 55588

Regd. Newspaper RNI No.TNTAM/2003/10418 Registration Number TN/CC(S)DN/588/19-21
WPP LICENCE NUMBER TN/PMG(CCR)/WPP 625/19-21 Date of Publication 18th of Every Month

Karunya
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS

Good news for you
dear Karunya aspirant!

# ADMISSIONS
ARE OPEN NOW
FOR 2022-23

**Be an early bird.**
**REGISTER NOW!**

ARISE
AND
SHINE

Warm welcome to
your future home

COME TO BECOME A
LIGHT TO THE WORLD!

Approval | Accreditation | India Ranking | Global Rating | India Rating

AICTE
UGC
University Grants Commission
Government of India
Ministry of Human Resource Development
NAAC
nirf NATIONAL INSTITUTIONAL RANKING FRAMEWORK
QS STARS RATING SYSTEM 2019 Facilities / Inclusiveness
QS STARS RATING SYSTEM 2019 Teaching
QS I-GAUGE INDIAN UNIVERSITY RATING GOLD

**Karunya Institute of Technology and Sciences,**
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu
**Toll Free: 1800 425 4300**

APPLY NOW!
Scan QR Code to Start the Admission Process